உ

திருச்சிற்றம்பலம்

# திருவருட்பா
# விண்ணப்பக் கலிவெண்பா


ஆசிரியர்

**இராமலிங்க அடிகள்**

உரையாசிரியர்

வள்ளற்பெருமானின் மாணாக்கர்

**வேங்கடசுப்புப் பிள்ளை**



வெளியீடு

**வள்ளலார் இளைஞர் மன்றம்**

கோட்டைக்கரை, வடலூர் - 607 303

உ

திருச்சிற்றம்பலம்

# திருவருட்பா
# விண்ணப்பக் கலிவெண்பா


ஆசிரியர்

**இராமலிங்க அடிகள்**

உரையாசிரியர்

வள்ளற் பெருமானின் மாணக்கர்

**வேங்கட சுப்புப்பிள்ளை**



வெளியீடு

வள்ளலார் இளைஞர் மன்றம்

கோட்டைக்கரை, வடலூர் 607 303

## காலத்திற்கேற்றது

வள்ளலார் திருஅவதார நாள்
05-10-2006

ஓடுகின்றனன் கதிரவன்; அவன்பின் ஒவ்வொரு நாளும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. தமிழ் நாட்டின் திருத்தலங்கள் 274. அவற்றை ஒரே மூச்சில் அகமுகமாக வலம் வந்து வழிபடும் வகையைத் தெரிவிப்பது விண்ணப்பக் கலிவெண்பா! அதனை முடிந்த வரையில் படித்து வழிபடும் தெளிவினைப்பெற இந்த நூல் உதவக்கூடும்.

மன்ற ஆசிரியர் குழுவினர்

## உரையாசிரியர் பற்றிய குறிப்பு

| | |
|---|---|
| பெயர் | : வேங்கட சுப்புப்பிள்ளை |
| ஊர் | : சென்னைக்கு மேற்கில் அரன் வாயல் |
| காலம் | : 1874 க்குப் பக்கம் |
| குலம் | : கருணீகர் |
| கல்வி | : மகாவித்வான், சித்தாந்த ரத்நாகரம் |
| சிறப்பு | : வள்ளலின் மாணாக்கரில் ஒருவர் |
| நூல் | : வள்ளலார் பதிற்றுப் பத்தந்தாதி |
| உரை | : திருவருட்பா - முதல் திருமுறை - 5 நூல்கள் |
| வெளியீடு | : சமரச சுத்த சன்மார்க்க சங்கம் கூளை, சென்னை. |
| நாள் | : 24.05.1936. தாது வருடம், வைகாசி - 11. |

உ

சிவமயம்

## காப்புப்பாடல்

அவ்வவ் இடைவந்து அகற்றி அருள்தரலால்
எவ்எவ் இடையூறும் எய்தல்இலம் - தெவ்வர்தமைக்
கன்றுமத மாமுகமும் கண்மூன்றும் கொண்டிருந்த(து)
ஒன்றதுநம் முள்ளம் உறைந்து.

உரை : அகப்புறபகைவரைக் கோபிக்கின்ற தகுதிஉடையது. மதத்தைப் பொழியும் யானை மா முகத்தை உடையது. மூன்று கண்களைத் தாங்கியருளும் முன்னை மெய்ப்பொருளாகித்திகழ்வது. அந்த ஒன்று நமது உள்ளத்தில் குடி கொண்டுள்ளது. எந்தத் துன்பங்களையும் நீக்கி அருள் செய்வது. ஆதலால் எத்தகைய இடையூறும் யாம் அடைதல் இல்லையாம்.

~~~~~

உ

திருச்சிற்றம்பலம்

## சோழ நாடு-காவிரி வடகரைத் தலங்கள்

### விண்ணப்பக் கலிவெண்பா கண்ணிகள் 1-64

### 1/வ.1. தில்லை - சிதம்பரம் - 608001

### கோயில்- பெரும்பற்றப்புலியூர்

சொற்பெறு மெய்ஞ்ஞானச் சுயஞ்ஜோதி யாந்தில்லைச்
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே - நற்சிவையாம்
தாயின் உலகனைத்துந் தாங்குந் திருப்புலியூர்க்
கோயில் அமர்ந்த குணக்குன்றமே (1, 2)

'உலகெலாம்' என்னும் மெய்ம்மொழி தோன்றியருளிய தில்லைச் சிதம்பரத்தில் வாழ்கின்ற அருட்பெருஞ்சோதியாம் முதன்மைத் தெய்வமே!
~~~~~

நன்மையே ஈந்தருளும் சிவகாம வல்லியாம் அருட் தாயின் மூலம் எல்லா உலகங்களையும் தாங்கியருள்கின்ற பெரும்பற்றப்புலியூரில் வீற்றிருந்தருளும் எண்குணமலையே!

இறைவர் : **நடராசர்** - **இறைவி : சிவகாமசுந்தரி**

தில்லை சைவத்தின் தலைமைக் கோயில் என்பதால் வள்ளலார் இதனை இரண்டு கண்ணிகளால் போற்றியுள்ளார்.

<u>*சிறப்பு :*</u> இறைவர் ஆனந்த நடம் செய்தருளிய தலம். மாணிக்கவாசகர், பதஞ்சலி, வியாக்ரபாதர், உபமன்யு, வியாசர், சுகர், திருநீலகண்டர், நந்தனார், கூற்றுவநாயனார், கணம்புல்லர், சேந்தனார், உமாபதி சிவம் முதலானவர்கள் அருள்பெற்ற தலம். நால்வர், குமரகுருபரர், அருணகிரிநாதர், குருநமசிவாயர், வள்ளலார் மற்றும் பலர் பாடல் பெற்றது. கடலூருக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ளது.

~~~~~

## 2/வ.2. திருவேட்களம் - 608 002 (அ.ம.நகர்)

"- மாயமிகும்
வாட்கள முற்றாங்குவிழி மாதர் மயலற்றவர்சூழ்
வேட்கள முற்றோங்கும் விழுப்பொருளே"(3)

மாயம் மிகுந்துள்ள வாளினிடத்துக் கபடத்தன்மை பொருந்தியுள்ளது போல விழித்துப் பார்க்கின்ற கண்களையுடைய பெண்களின் மயக்கத்தை ஒழித்தவர்களாகிய ஞானிகள் வலம் வருகின்ற திருவேட்களம் என்னும் திருப்பதியில் எழுந்தருளிப் பிரகாசிக்கின்ற மேலான பொருளே!

**பாசுபத நாதர் - நல்லநாயகி**

அர்ச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கிய தலம். ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழக நகருள் உள்ளது.

~~~~~



## 3/வ.3. திருநெல்வாயில் (சிவபுரி - 608 002)

"வாழ்க்கைமனை
நல்வாயி லெங்கும் நவமணிக் குன்றோங்கு திரு
நெல்வாயில் நின்றொளிரும் நீளொளியே" (4)

காருணியத் திருவுடையார் வாயில்களில் வாழும் இல்லங்களின் எவ்விடத்தும் நவமணிகள் இழைத்த செய்குன்றுகள் உயர்ந்து தோன்றுகின்ற திருநெல்வாயிலில் நின்று விளங்குகின்ற பேரொளியே!

**உச்சிநாதர் - கனகாம்பிகை**

கண்வ மகரிஷி வழிபட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது. அண்ணாமலை நகருக்கு அருகில் உள்ளது.

~~~~~

## 4/வ.4. திருக்கழிப்பாலை - (608 002)

"- செல்வாய்த்
தெழிப்பாலை வேலைத் திரையொலி போலார்க்குங்
கழிப்பாலை இன்பக் களிப்பே" (5)

மேகத்தின்கண் உண்டாகும் முழக்கத்தோடு அழகிய கடல் அலைகளின் ஓசைஒத்து முழங்குகின்ற திருக்கழிப்பாலையின் எழுந்தருளியிருக்கின்ற ஆனந்தக் களிப்பே!

**பால் வண்ண நாதர் - வேத நாயகி**

மூலவர் சுயம்பு; வெண்ணிறம்; பால் மட்டுமே அபிடேகம்; வால்மீகி முனிவர் வழிபட்ட தலம். மூவரால் பாடப் பெற்றது. சிவபுரிக்கு அருகில் 1/2 கி.மீ. தொலைவில் உள்ளது.

~~~~~

## 5/வ.5. திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம் 609 101)

"- விழிப்பாலன்
கல்லூர்ப் பெருமணத்தைக் கட்டுரைக்கச் சோதிதரு
நல்லூர்ப் பெருமணம் வாழ் நன்னிலையே" (6)

திருமுருகப் பெருமான் அவதாரமாகிய திருஞானசம்பந்தர் "கல்லூர்ப் பெருமணம்" என்னும் தேவாரப் பதிகத்தை எடுத்தோத சோதிப் பிழம்பாய்த் தோன்றியருளிய திருப்பெருமணநல்லூர் அருள் நிலையே!

**சிவலோகத் தியாகேசர் - வெண்ணீற்று உமை நங்கை**

திருஞான சம்பந்தர் திருமணம்பூண்டு பதிகம்பாடி அன்பர்களோடு சிவஜோதியில் கலந்த இடம். சிதம்பரம் - மகேந்திரப்பள்ளி, சீர்காழி - மகேந்திரப்பள்ளி இடையில் இத்தலம் உள்ளது.

~~~~~

## 6/வ.6. திருமயேந்திரப்பள்ளி (மகேந்திரப்பள்ளி) 609 101

"-சொல்லுந்
நயேந்திர ருள்ளத் தடம் போலிலங்கும்
மயேந்திரப் பள்ளி இன்ப வாழ்வே" (7)

புகழ்ந்துரைக்கும் அருளால் சிறந்த ஞானியரது தாமரை உள்ளத் தடாகம் போல் விளங்குகின்ற திருமயேந்திரப்பள்ளி என்னும் திருப்பதியில் எழுந்தருளிய பேரின்ப வாழ்வே!

**திருமேனியழகர் - வடிவம்மை**

இந்திரன், சந்திரன் வழிபட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது. பங்குனி மாதத்தில் சூரிய பூசை நடைபெறும் தலம். சிதம்பரம், சீர்காழியிலிருந்து ஆச்சாள்புரம் வழியாகச் செல்லலாம்.

~~~~~



## 7/வ.7. தென் திருமுல்லைவாயில்
## (திருமுல்லைவாசல் - 609 113)

"- கயேந்திரனைக்
காயலுறா தன்று வந்து காத்தோன் புகழ்முல்லை
வாயிலி னோங்கு மணி விளக்கே" (8)

கஜேந்திரன் என்னும் யானையை முதலை கொல்லாமல் அந்நாளில் வந்து காத்த திருமால் புகழ்கின்ற திருமுல்லைவாயிலில் விளங்குகின்ற மாணிக்க விளக்கே!

**முல்லை வனநாதர் - கோதையம்மை**

சோழமன்னன் ஒருவனின் பிரமகத்தி தோஷம் நீங்கிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. சீர்காழிக்குக் கிழக்கில் உள்ளது. சென்னையில் வடதிருமுல்லைவாயில் உள்ளது.

~~~~~

## 8/வ.8. திருக்கலிக்காமூர்
## (அன்னப்பன் பேட்டை- 609 106)

"-மேய
பலிக்காவூர் தோறும் பதஞ்சேப்பச் சென்று
கலிக்காமூர் மேவுங் கரும்பே" (9)

பிச்சையின் பொருட்டுத் திருவடிகள் சிவக்கச் சென்றருளிய திருக்கலிக்காமூரில் இருக்கின்ற அருட்கரும்பே!

**சுந்தரேஸ்வரர் - அழகம்மை**

பராசர முனிவர் வழிபட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது. சீர்காழியிலிருந்து நகரப் பேருந்துள்ளது.

~~~~~

## 9/வ.9. திருச்சாய்க்காடு (சாயாவனம் - 609 105)

"-வலிக்காலிற்
பாய்க்காடு கின்றவொரு பச்சைமுகில் பரவுஞ்
சாய்க்காடு மேவுந் தடங்கடலே" (10)

பாம்பணையில் அறிதுயில் கொள்ளும் பசுமை மேகமாம் திருமால் வணங்கும் திருச்சாய்க்காட்டில் எழுந்தருளி இருக்கின்ற பேரின்பக் கடலே!

**சாயாவனேஸ்வரர் - குயிலினும் நன்மொழியம்மை**

உபமன்யு முனிவர், இயற்பகை நாயனார் வழிபட்டது. சம்பந்தர், அப்பர், ஐயடிகள் காடவர்கோன் பாடல் பெற்றது. சீர்காழி - பூம்புகார்ச் சாலையில் திருவெண்காட்டிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

## 10/வ.10. திருப்பல்லவனீச்சுரம் பூம்புகார் - 609 105

"- வாய்க்கமையச்
சொல்லவ னீச்சரங்கு தோயவெம்பராம் பெருமைப்
பல்லவ னீச்சரத்தெம் பாவனமே" (11)

சொல்லுதற்குத் தகுதியில்லாத சண்டாளர் வந்துசேர அவர்களையும், தேவர்களாக்கி விளங்கும் பெருமைஉடைய திருப்பல்லவனீச்சுரத்து எமது பரிசுத்தமே!

**பல்லவனேஸ்வரர் - சௌந்தர நாயகி**

சம்பந்தர் பாடியது. சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை ஊர்களிலிருந்து செல்லலாம்.



## 11/வ.11. திருவெண்காடு - 609 114

" - நல்லவர்கள்
கண்காட்டு நெற்றிக் கடவுளே யென்றுதொழ
வெண்காட்டின் மேவுகின்ற மெய்ப்பொருளே" (12)

சீவகாருணியச் சீலர்கள் அறிமுகம் செய்தருள முக்கண் கடவுளே என்று வணங்கும் திருவெண்காட்டில் விளங்குகின்ற உண்மைத் தெய்வமே!

**வெண்காட்டு நாதர் - பிரம்ம வித்யா நாயகி**

இந்திரனின் வெள்ளை யானை வழிபட்ட தலம். மெய்கண்டார் அவதாரம் செய்தருளக் காரணமாகிய "முக்குளநீர்" தீர்த்தம் உள்ள தலம். அகோரமூர்த்திக்கு ஞாயிறுதோறும் 10 மணிக்குச் சிறப்பு வழிபாடு உண்டு. தினமும் ஆறுகால வழிபாடு உண்டு. நவக்கிரகத் தலங்களில் புதன் தலம். மூவராலும் பாடல் பெற்றது. சீர்காழியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

## 12/வ.12. கீழைத் திருக்காட்டுப்பள்ளி - 609 114 (ஆரண்யேசுரர் கோயில்)

" - தண் காட்டிக்
கார்காட்டித் தையலர்தங் கண்காட்டிச் சோலைகள் சூழ்
சீர்காட்டுப் பள்ளிச் சிவக்கொழுந்தே" (13)

குளிர்ச்சியும், பசுமையும் சேர்ந்த மகளிரின் கண்கள் போல் மலர்ச்சியுடைய சோலைகள் சூழ்ந்திருக்கும் திருக்காட்டுப் பள்ளிச் சிவக் கொழுந்தே!

**ஆரண்ய சுந்தரேஸ்வரர் - அகிலாண்டநாயகி**

இந்திரன், பூசித்த பதி. நண்டு பூசித்த பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. சீர்காழியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. மேலைத் திருக்காட்டுப்பள்ளி காவிரியின் தென்கரைத் தலமாகும்.

### 13/வ.13. திருக்குருகாவூர் - 609 115
### (திருக்கடாவூர்)

" - பார்காட்(டு)
உருகாவூ ரெல்லாம் ஒளி நயக்க வோங்குங்
குருகாவூர் வெள்ளடை யெங்கோவே" (14)

உலகினில் வளம் நிறைந்த தலங்கள் யாவும் அருள் ஒளியால் நிலை பெறும்படிச் செய்தோங்கும் திருக்குருகாவூர் பரமாகாசராகிய எம் அரசே!

**வெள்ளடை நாதர் - காவியங் கண்ணி**

சுந்தரருக்கு உணவும், நீரும் தந்து பசி நீக்கியருளிய பதி. சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. சீர்காழி திருமுல்லைவாயில் செல்லும் சாலையில் 6 கி.மீ. ல் வடகாலிலிருந்து 1 கி.மீ ல் உள்ளது.

### 14/வ.14. சீர்காழி - 609 110

" - அருகாத
கார்காழி நெஞ்சக் கவுணியர்க்குப் போதமருள்
சீர்காழி ஞானத் திரவியமே" (15)

குறையாத அருள்செல்வமும் குன்றாத சிவஒளியும் நிறைந்த உள்ளம் கொண்ட திருஞான சம்பந்தருக்குச் சிவஞானச் சிறப்பு ஈந்தருளிய சீர்காழியின் மெய்ஞானச் செல்வமே!

**பிரமபுரீஸ்வரர் - திருநிலைநாயகி**

ஞானசம்பந்தர் அவதாரம் செய்தருளி, ஞானப்பால் உண்டு பதிகம் பாடிய பதி. முருகன், காளி, பிரமன், திருமால், குரு, இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி, ஆதிசேடன், ராகு, கேது முதலியோர் வழிபட்ட பதி. அங்கேயே சட்டையப்பருக்குக் கட்டுமலையில் தனிக் கருவறையுள்ளது. சிதம்பரத்திற்கு அடுத்த திருத்தலம்.



### 15/வ.15. திருக்கோலக்கா - 609 110

" - ஓர்காழிப்
பாலற்கா அன்று பசும் பொற்றாளங் கொடுத்த
கோலக்கா மேவுங் கொடையாளா" (16)

ஒப்பற்ற சீர்காழிப் பதியில் உதயம் செய்தருளிய திருஞான சம்பந்தருக்காகத் திருத்தல யாத்திரையின்போது பசும் பொன் தாளமீந்த திருக்கோலக்காவில் விளங்கும் அருட்கொடையாளனே.

**திருத்தாளமுடையார் - ஓசை நாயகி**

சம்பந்தர் தல யாத்திரையின் முதல்தலமாகிய இங்கு இறைவன் அவருக்குப் பொன் தாளத்தினையும் இறைவி அதற்குத் தெய்வீக ஓசையையும் வழங்கினர். சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. அகத்தியர், கண்வர் வழிபட்டது. சீர்காழி ஆலயத்திற்கு மேற்கில் 1கி.மீ. தொலைவில் உள்ளது.

### 16/வ.16. புள்ளிருக்கு வேளூர்
### (வைத்தீஸ்வரன் கோயில் - 609117)

" - கோலக்கா
உள்ளிருக்கும் புள்ளிருக்கு மோதும் புகழ்வாய்ந்த
புள்ளிருக்கும் வேளூர்ப் புரிசடையாய்" (17)

எழில் நிறைந்த சோலைகளிலிருக்கும் பறவைகளும் "இருக்கு" வேதகீதம் பாடிடும் கீர்த்தி வாய்ந்த திருப்புள்ளிருக்கு வேளூர் சடை முடியானே!

**வைத்தியநாதர் - தையல்நாயகி**

புள் (சடாயு) இருக்கு (வேதம்) வேள் (முருகன்) ஊர் (சூரியன்) வழிபட்ட தலம். செவ்வாய் (அங்காரகன்) வழிபட்டது. எனவே நவக்கிரக வழிபாட்டுத் தலங்களுள் ஒன்று. மாதந்தோறும் கார்த்திகை வழிபாடு சிறப்பு. சம்பந்தர், அப்பர், வள்ளலார், குமரகுருபரர் பாடல் பெற்றது. சிவத்தலங்களுள் விசேடமானது. சீர்காழி, மயிலாடுதுறை இடையில் உள்ளது.

## 17/வ.17. திருக்கண்ணார் கோயில் (குறுமாணக்குடி - 609 117)

" - கள்ளிருக்கும்
காவின் மருவுங் கனமுந் திசை மணக்குங்
கோவின் மருவு கண்ணார் கோயிலாய்" (18)

தேனிருக்கும் சோலைகள் சூழும் பெருமையும், எண்திசை எல்லாம் அருள் மணக்கும் திருக்கோயிலும் விளங்கும் தகைமையுடைய திருக்கண்ணார் கோயிலானே.

**கண்ணாயிர நாதர் - முருகுவளர் கோதை**

இந்திரன் வழிபட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது. வைத்தீஸ்வரன் கோயில் - மயிலாடுதுறை வழியில் "பாகசாலை" யிலிருந்து 3. கீ. மீ. தொலைவில் உள்ளது.

## 18/வ.18. திருக் கடை முடி (கீழூர், கீழையூர்-609 304)

" - மாவின்
இடைமுடியின் தீங்கனியென் றெல்லின் முசுத்தாவுங்
கடைமுடியின் மேவுங் கருத்தா" (19)

மாமரத்தின் இலைகளின் இடையிலும் முடியிலும் வீசும் இளஞ்சூரியனைப் பழுத்த தீங்கனி என்று கருங்குரங்குகள் தாவிப் பறிக்க முயலும் திருக்கடைமுடியில் விளங்கும் தலைமையாளனே!

**கடைமுடிநாதர் - அபிராமி**

சம்பந்தர் பாடல் பெற்றது. மயிலாடுதுறை - பூம்புகார்ச் சாலையில் சத்திரத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது.



## 19/வ.19. திருநின்றியூர் - 609 118

" - கொடைமுடியா
நன்றியூ ரென்றிந்த ஞாலமெலாம் வாழ்த்துகின்ற
நின்றியூர் மேவு நிலைமையனே" (20)

ஈதல்அறத்தைத் தலைமையாய்க் கொண்டுள்ள திருவூர் என்று உலகமெல்லாம் போற்றுகின்ற திருநின்றியூரில் விளங்கும் அருட் சிறப்பு உடையவனே.

**மகாலட்சுமீசுவரர் - உலக நாயகி**

சுயம்பு மூர்த்தி, இலக்குமி, பரசுராமர், அகத்தியர் வழிபட்டது. மூவராலும் பாடப்பெற்றது. மயிலாடுதுறை - வைத்தீஸ்வரன் கோவில் சாலையில் உள்ளது.

## 20/வ.20. திருப்புன்கூர் - 609 112

" - ஒன்றிக்
கருப்புன்கூர் உள்ளக் கயவர் நயவாத்
திருப்புன்கூர் மேவும் சிவனே" (21)

இருள்சூழ்ந்த உள்ள முடையோராகிய பாதகர் விரும்பாத திருப்புன்கூரில் விளங்கும் சிவபெருமானே!

**சிவலோக நாதர் - சௌந்தர நாயகி**

சுயம்பு மூர்த்தி. நந்தனாருக்காக நந்தி விலகியருளிய தலம். மூவராலும் பாடல் பெற்றது. வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து 3 கி.மீ. இல் திருப்பனந்தாள் சாலையில் உள்ளது. நந்தனாரின் பிறந்தவூர் ஆதனூர், ஏயர்கோன் கலிக்காமரின் ஊர் பெருமங்கலம் இரண்டும் அருகில் உள்ளன.

## 21/வ.21. திருநீடூர் - 609 203

" - உருப்பொலிந்தே
ஈடுரிலா துயர்ந்த ஏது வினாலோங்கு திரு
நீடு ரிலங்கு நிழல்தருவே" (22)

அழகிய வடிவம் தாங்கியதும் வேறு இணையற்ற ஊரில்லாக் காரணத்தாலும் ஓங்கி திருநீடூரில் அருள் நிழல் ஈயும் கற்பகத் தருவே.

**சோமநாதேஸ்வரர் - வேத நாயகி**

முனையடுவார் நாயனார் தொண்டு செய்து முக்திபெற்ற பதி. அப்பர், சுந்தரர் பாடல் பெற்றது. மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

~~~~~

## 22/வ.22. திருஅன்னியூர் (பொன்னூர் - 609 203)

" - ரீடு கொண்டு
மன்னியூ ரெல்லாம் வணங்க வளங்கொண்ட
அன்னியூர் மேவும் அதிபதியே" (23)

அருள் ஈயும் சிறப்பினால் தெய்வத் திருவூர்கள் யாவும் தலைவணங்கும் வளமுடைய திருஅன்னியூரின் முதன்மைக் கடவுளே!

**ஆபத் சகாயேசுவரர் - பெரியநாயகி**

வருணன், அக்கினி, சூரியன், ரதி வழிபட்டது. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. மயிலாடுதுறையிலிருந்து 8 கி.மீ.

~~~~~



## 23/வ.23. திருவேள்விக்குடி - 609 801

" - மன்னர் சுக
வாழ்விக் குடிகளடி மண் பூசலா லென்னும்
வேழ்விக்குடி யமர்ந்த வித்தகனே" (24)

மாமன்னர்களின் சுகபோக வாழ்வெல்லாம் திருவேள்விக் குடியில் வாழும் பொது மக்களது திருவடிபட்ட மணலைப் பூசிக் கொண்டதனால் வந்ததுதான் என்று சொல்லும்படி அவ்வூரில் அமர்ந்த மேலவனே.

**கலியாணசுந்தரேசர் - நறுஞ்சாந்து நாயகி**

அரசன் மகன் ஒருவனுக்கு நிச்சயித்தபடித் திருமணத்திற்கு முன்பு மணமகன் பெற்றோர் இறக்க அதனால் திருமணம் தடை பட இறைவனே மணப்பெண்ணைத் தருவித்துத் திருமண வேள்வி செய்து தந்த திருவூர். குத்தாலத்திற்குப் பக்கமுள்ளது.

~~~~~

## 24/வ.24. திரு எதிர்கொள் பாடி (மேலைத் திருமணஞ்சேரி - 609 813)

" - சூழ்வுற்றோர்
விண்ணெதிர்கொண் டிந்திரன் போன்மேவி நெடுநாள் வாழப்
பண் எதிர்கொள் பாடிப் பரம்பொருளே" (25)

திரு எதிர்கொள்பாடி என்னும் திருப்பதியில் வந்து சேர்ந்தவர்களை இந்திரன் போல் நெடுநாள் வாழக் கருணைபுரியும் பரம்பொருளே!

**வெள்ளானை நாதர் - மலர்க்குழல் நாயகி**

திருவேள்விக் குடியில் மணம்புரிந்து வந்த தம் அடியவனான அரசகுமாரனை அவன் அம்மான்போல் இறைவன் எதிர்கொண்டழைத்துச் சென்ற தலம். சுந்தரர் பாடல் பெற்றது. மயிலாடுதுறையிலிருந்து நகரப் பேருந்து உள்ளது.
~~~~~

## 25/வ.25. திருமணஞ்சேரி - 609 813
## (கீழைத் திருமணஞ்சேரி )

"- நண்ணும்
வணஞ் சேரிறைவன் மகிழ்ந்து வணங்கும்
மணஞ்சேரி நீங்கா மகிழ்வே" (26)

நீங்காத நேயம் நிலை பெற அன்பர்கள் நெருங்கி வழிபடும் திருமணஞ்சேரி என்னும் திருப்பதியின் நீங்காத ஆனந்தமே!

**அருள்வள்ளல் நாதர் - கோகிலாம்பாள்**

திருமணம் தடைபடுகிறவர்கள் இங்கு வழிபட திருமணம் நடைபெறும்; மகப்பேறு இல்லாதவர்கள் இங்கு வந்து தீர்த்தத்தில் மூழ்கி வழிபட புத்திரப்பேறு அடைவர் என்பர். மன்மதன், ஆமை வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. மயிலாடுதுறை யிலிருந்து நகரப்பேருந்து உள்ளது.

## 26/வ.26. திருக்குறுக்கை (கொருக்கை - 609 203)

"- மணஞ்சேர்ந்து
வாரட்ட கொங்கை மலையாளொடுங் கொறுக்கை
வீரட்ட மேவும் வியனிறைவே" (27)

அருள் மணக்கும் கச்சணிந்த மார்பகமுடைய உமையவளோடும் திருக்குறுக்கை வீரட்டம் விளங்கிய ஞானநிறைவே!

**வீரட்டேஸ்வரர் - ஞானாம்பிகை**

அட்ட வீரட்டங்களுள் மன்மதனை எரித்த தலம். அப்பர் பாடல் பெற்றது. மயிலாடுதுறையிலிருந்து நகரப்பேருந்து உள்ளது.



## 27/வ.27 திருக்கருப் பறியலூர்
## மேலைக்காழி, தலை ஞாயிறு - 609 201

"- ஒரட்ட
திக்குங் கதி நாட்டிச் சீர்கொள் திருத்தொண்டருளம்
ஒக்குங் கருப்பறிய லூரரசே" (28)

எண்திசை உயிர்களும் ஈடேற்றம் பெறக் காருணிய வழியைச் சுட்டிக்காட்டி அவ்வழி நடக்கும் திருத்தொண்டர் உள்ளத்திற்கு இணையாகும் திருக்கருப்பறியலூர் அரசே!

**குற்றம் பொறுத்த நாதர் - கோல் வளை நாயகி**

வசிட்டர், அனுமன், இந்திரன் வழிபட்டது. சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. வைத்தீஸ்வரன் கோவில் - திருப்பனந்தாள் சாலையில் "தலை ஞாயிறு" என்னும் கைகாட்டி சுட்டும் வழியில் சென்று இவ்வூர் அடையலாம்.

## 28/வ.28. திருக் குரக்குக்கா
## (திருக்குரக்காவல் - 609 201)

"- மிக்கதிரு
மாவளருஞ் செந்தாமரை வளருஞ் செய் குரக்குக்
கா வளரும் இன்பக்கன சுகமே" (29)

செல்வம் மிக ஓங்கும்படியாக இலக்குமி விளங்கும் செந்தாமரை மலர்கள் சிறந்த திருக்குரக்குக்காவின் பேரின்பச் சுகமே!

**குந்தளேஸ்வரர் - குந்தளாம்பிகை**

அநுமன் வழிபட்டது. அப்பர் பாடல் பெற்றது. மயிலாடுதுறை பட்டவர்த்தி நகரப் பேருந்தில் மதகடியில் இறங்கிச் செல்லலாம்.

## 29/வ.29. திருவாழ்கொளிப்புத்தூர்
## (திருவாளப்புத்தூர் 609 205)

" - தாவுமயல்
காழ்கொள் இருமனத்துக் காரிருணீத் தோர் மருவும் -
வாழ்கொளி புத்தூர் மணிச்சுடரே" (30)

பெண்களின் காம மயக்கம் நீத்த உயரிய உள்ளத்தினை உடையோர் பொருந்துகின்ற திருவாழ்கொளிப்புத்தூர் மாணிக்கதீபமே!

**மாணிக்க வண்ணர் - வண்டமர் பூங்குழலி**

தீர்த்த யாத்திரையில் அர்ச்சுனன் நீர்வேட்கை நீக்கிய பதி. சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. மயிலாடுதுறை - மணல்மேடு பேருந்தில் இவ்வூருக்குச் செல்லலாம்.

## 30/வ.30. பழமண்ணிப் படிக்கரை
## (இலுப்பைப்பட்டு - 609 202)

" - தாழ்வகற்ற
நண்ணிப் படிக்கரையர் நாடோறும் வாழ்த்துகின்ற
மண்ணிப் படிக்கரை வாழ் மங்கலமே" (31)

பழி பாவங்களை நீக்க பூமண்டலத்தரசர்கள் நெருங்கி வந்து தினந்தோறும் வாழ்த்திப் போற்றுகின்ற திருமண்ணிப் படிக்கரையில் விளங்கும் சுபமே!

**படிக்கரைநாதர் - மங்களநாயகி**

பாண்டவர்கள் வழிபட்ட தலம். சுந்தரர் பாடல் பெற்றது. நஞ்சுண்ட சிவனின் கழுத்தில் உமையவள் விஷத்தினை நிறுத்திய பதி. வைத்தீஸ்வரன் கோவில் - திருப்பனந்தாள் சாலையில் மணல்மேடு சென்றால் பாப்பாகுடி சாலையில் உள்ளது.



## 31/வ.31. ஓமாம்புலியூர் - 608 306

" - விண்ணினிடை
வோமாம் புலியூர் மலர்ச்சோலை சூழ்ந்திலங்கும்
ஓமாம் புலியூர் வாழ் உத்தமமே" (32)

விண்ணில் தாவும் ஆற்றலுடைய புலிகள் அகிம்சை அறம் பூண்டு இயங்கும், மலர்ச் சோலைகள் சூழ்ந்த திருஓமாம்புலியூர்ப் புனிதப் பொருளே!

**பிரணவபுரீஸ்வரர் - பூங்கொடி நாயகி**

வியாக்ரபாதர் வழிபட்ட 5 புலியூர்களுள் ஒன்று. உமைக்கு பிரணவப் பொருள் உபதேசம் செய்தது வேள்விச் சிறப்புகளுடையது; சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. சிதம்பரம், காட்டுமன்னார்குடியிலிருந்து பேருந்தில் செல்லலாம்.

## 32/வ.32. கானாட்டுமுள்ளூர்
## (கானாட்டம்புலியூர் - 608 306)

" - நேமார்ந்த
வானாட்டு முள்ளூர் மருவுகின்றோர் போற்றுதிருக்
கானாட்டு முள்ளூர்க் கலைக்கடலே (33)

செழிப்புடைய வானகத்து வளத்தினை நிலை நாட்டிடும் உள்ள மலர்ச்சியுடையோர் புகழும் திருக்கானாட்டு முள்ளூர் மெய்ஞ்ஞான ஆழியே!

**பதஞ்சலிநாதர் - கானார்குழலி**

சுந்தரர் பாடல் பெற்றது. காட்டுமன்னார்குடி - ஓமாம்புலியூர் சாலையில் 'முட்டம்' சென்று செல்ல வேண்டும்.

## 33/வ.33. திருநாரையூர் (608 303)

"- மேனாட்டுந்
தேரையூர்ச் செங்கதிர் போல் செம்மணிகள் நின்றிலங்கும்
நாரையூர் மேவு நடு நிலையே" (34)

வானமண்டலத்து வழியே செல்கின்ற ஒற்றைச் சக்கரத் தேரைச் செலுத்துகின்ற கதிரவன் போல் நன்மணிகள் விளங்கும் திருநாரையூரின் உபகார உருவமே!

**சௌந்தர நாதர் - திரிபுரசுந்தரி**

நம்பியாண்டார் நம்பி அவதாரத் தலம். இங்குள்ள "பொள்ளா"ப் பிள்ளையார் அருளால் தில்லையிலிருந்து திருமுறைகள் வெளிப்படுத்தப்பட்டன. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. சிதம்பரம் - காட்டுமன்னார் கோவில் சாலையில் 'குமராட்சி' யிலிருந்து " கி.மீ. தொலைவில் உள்ளது.

## 34/வ.34. திருக்கடம்பூர் (மேலக் கடம்பூர்- 608 304)

"- பாரில்
உடம்பூர் பவத்தை யொழித்தருளும் மேன்மைக்
கடம்பூர் வாழ் என்னிரண்டு கண்ணே" (35)

பூவுலகில் பிறவிப் பிணியை ஒழித்தருள்கின்ற மேன்மை உடைய திருக்கடம்பூரில் வாழ்ந்தருளும் என் இரு கண்மணியே!

**அமிர்தகடேஸ்வரர் - சோதிமின்னம்மை**

இந்திரன் வழிபட்டு அமுதகலசமும், முருகன் வழிபட்டு வில்லும் பெற்ற பதி. செவ்வாய்தோஷ நிவர்த்திப் பதி. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. "என் கடன் பணி செய்துகிடப்பதே" என அப்பர் இவ்வூர்த் தேவாரத்தில் அருளியுள்ளார். சிதம்பரம் - காட்டுமன்னார்குடி (வழி) எய்யலூர் பேருந்தில் சென்று அடையலாம்.



## 35/வ.35.பந்தணை நல்லூர் (பந்த நல்லூர்-609 807)

"- நடம் பொழிலிற்
கொந்தணவுங் கார்க்குழலார் கோலமயில் போலுலவும்
பந்தண நல்லூர்ப் பசுபதியே" (36)

மணம் சிந்தும் மலர்க் கொத்துக்களைச் சூடிக் கரிய சுருண்ட கூந்தலை உடைய மகளிர் அழகு மயில்போல் உலவி நிற்கும் திருப்பந்தண நல்லூர் பசுபதியே!

**பசுபதீஸ்வரர் - வேயுறுதோளி**

"காம்போச" மன்னன் மகன் குருடு நீங்கியது, காமதேனு, திருமால், கண்வமகரிஷி, வாலி, இந்திரன், பிரமன், சூரியன் வழிபட்டது. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. சுயம்புமூர்த்தி. கும்பகோணம் மற்றும் திருப்பனந்தாளிலிருந்து இவ்வூருக்குச் செல்லலாம்.

## 36/வ.36. கஞ்சனூர் - 609 804

"- கந்தமலர்
அஞ்சனூர் செய்த தவத்தாலப் பெயர்கொண்ட
கஞ்சனூர் வாழும் என்றன் கண்மணியே" (37)

நறுமணம் வீசும் தாமரை மலரில் தோன்றிய பிரமன் தவம் செய்து வழிபட்ட கஞ்சனூரில் வாழும் என்தன் கண்மணியே!

**அக்னீஸ்வரர் - கற்பகாம்பிகை**

அரதத்தர் சிவமே பரம் பொருள் என்று நிரூபித்த இடம். அப்பர் பாடல் பெற்றது. கும்பகோணம், திருவாவடுதுறையிலிருந்து பேருந்து வசதி உண்டு.

## 37/வ.37. திருக்கோடிகா (திருக்கோடிகாவல் - 609 802)

" - அஞ்சுகங்கள்
நாடிக்கா வுள்ளே நமச்சிவாயம் புகலுங்
கோடிக்கா மேவுங் குளிர்மதியே" (38)

கிளிக்கூட்டங்கள் சோலையின் உள்ளே குழுமி 'நமச்சிவாய' என்னும் திருமந்திரத்தை ஒலிக்கும் திருக்கோடிக்காவின் தண்ணிலவே!

**கோடீஸ்வரர் - வடிவாம்பிகை**

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. கும்பகோணம் - கதிராமங்கலம், மயிலாடுதுறை - குத்தாலம் செல்லும் வழியில் உள்ளது.

## 38/வ.38. திருமங்கலக்குடி - 612 102

" - ஓடிக்
கருமங்கலக் குடியிற் காண்டுமென வோதும்
திருமங்கலக் குடியில் தேனே" (39)

தீவினைகள் விலகி ஓடுவதைக் காணும் திருமங்கலக்குடியில் வாழ்ந்தருளும் தேனே!

**பிராணவரதேஸ்வரர் - மங்கள நாயகி**

திருமணத்தடை நீக்கி இறைவி மாங்கல்ய பலம் அருளுமிடம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. கும்பகோணம் - கதிராமங்கலம் வழி மயிலாடுதுறை பேருந்தில் செல்லலாம்.



## 39/வ.39. திருப்பனந்தாள் - 612 504

" - தரும
மனந்தாள் மலரை மருவுவிப்போர் வாழும்
பனந்தாளிற் பாலுகந்த பாகே" (40)

அறச்செயல்களில் நாட்டமுடையவர் தம் உள்ளமாகிய மலரை இறைவன் திருவடிகளில் சேர்வித்து வாழ்கின்ற திருப்பனந்தாளில் உமையவள் வழிபாட்டை ஏற்று (இடப்பாகம் அளித்து) உவந்த செம்பாகே!

**நெஞ்சடையப்பர் - பெரியநாயகி**

சுயம்புமூர்த்தி. குங்குலியக் கலயநாயனார் வழிபட்டுப் பேறு பெற்ற பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. குமரகுருபரர் நிறுவிய காசி மடம் உள்ளது. கும்பகோணத்திலிருந்தும் மயிலாடுதுறையிலிருந்தும் செல்லலாம்.

## 40/வ.40. திருஆப்பாடி (திருவாய்ப்பாடி - 612 504)

" - தினந்தாளிற்
சூழ் திருவாய்ப் பாடியங்கு சூழ்கினுமா மென்றுலகர்
வாழ் திருவாய்ப்பாடி இன்ப வாரிதியே" (41)

நாளும் நாளும் இறைவன் திருவடிமலர்களைப் பாடிப் பரவினால் மட்டுமே நற்கதி பெற இயலும் என்பதைக் குறிக்கும் திருவாய்ப்பாடிப் பேரின்பக் கடலே!

**பாலுகந்தநாதர் - பெரியநாயகி**

சண்டேசுவரர் வழிபட்டது. அப்பர் பாடல் பெற்றது. கும்பகோணம் - திருப்பனந்தாள் சாலையில் உள்ளது.

## 41/வ.41. திருசேய்ஞலூர் (சேங்கனூர் - 612 504)

"-ஏழ்புவிக்குள்
வாய்ஞ்ஞலூர் ஈதேமருவ என வானவர்சேர்
சேய்ஞ்ஞலூர் இன்பச் செழுங்கனியே" (42)

ஏழு உலகங்களிலும் இறைவனை அடைய மிகவும் வாய்ப்புடைய ஊர் இதுவே என தேவாதி தேவர்கள் வந்து சேரும் திருச்சேய்ஞ்ஞலூரில் கனிந்த செழுங்கனியே

**சத்தியகிரிநாதர் - சகிதேவிஅம்மை**

சேய் (முருகன்) அமைத்த நல்லூர். சண்டேசுவரநாயனார் மற்றும் வைணவப் பெரியவர் பெரியவாச்சான் பிள்ளை அவதரித்த பதி. சிபி, அரிச்சந்திரன் வழிபட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது. கும்பகோணம் - திருப்பனந்தாள் சாலையில் உள்ளது.

## 42/வ.42. திருந்துதேவன்குடி (நண்டாங்கோயில்) (திருத்தேவன்குடி - 612 105)

" - வாஞ்சையுறும்
சீவன் குடியுற விச்சீர் நகரொன்றே யெனுஞ்சீர்த்
தேவன்குடி மகிழ்ந்த தெள்ளமுதே" (43)

விருப்பு வெறுப்புகளில் உழலும் உயிரானது வீடுபெற அருளுவது இந்த உயர் நகரமே எனத் திருத்தேவன்குடி திருப்பதியில் இனிக்கும் தெள்ளிய அமுதமே!

**கற்கடகேஸ்வரர் - அருமருந்தம்மை**

நண்டு (கற்கடம்) பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. மயிலாடுதுறையிலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் வரலாம்.



## 43/வ.43. திருவியலூர் (திருவிசநல்லூர்/ திருவிசலூர்-612 105) (பண்டாரவாடை திருவிசலூர்)

"- ஓவில்
மயலூர் மனம்போல் வயலிற் கயலூர்
வியலூர் சிவானந்த வெற்பே" (44)

இடையீடு இல்லாமல் மாயையைப் பற்றும் மனம்போல் நெல் வயல்களில் கயல்மீன்கள் பிறழும் திருவியலூர் ஓங்கும் சிவானந்த மலையே!

**வில்வாரண்யேசுவரர் - சாந்த நாயகி**

சாத்திரநூல்களுள் "திருவுந்தியார்" பாடிய திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் அவதரித்த பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. கும்பகோணத்திலிருந்து நகரப்பேருந்து உண்டு.

## 44/வ.44. கொட்டையூர் (612 002)

" - அயலாம்பல்
மட்டையூர் வண்டினங்கள் வாய்ந்து விருந்துகொளும்
கொட்டையூருட் கிளரும் கோமளமே" (45)

நீர்நிலைகளில் பூத்துக் குலுங்கும் அல்லி மலர்களின் தேனைச் சிறந்த விருந்தாக வண்டினங்கள் உண்டு மகிழும் திருக்கொட்டையூரில் வாழ்கின்ற ஒளிவீசும் மரகத மணியே!

**கோடீஸ்வரர் - பந்தாடு நாயகி**

சோழமன்னனுக்கும் ஏரண்ட முனிக்கும் பத்திரயோகி முனிக்கும் கோடிலிங்கமாகக் காட்சி அளித்த ஊர். மார்க்கண்டேயர் வழிபட்டது. அப்பர் பாடல் பெற்றது. கும்பகோணம் - திருவையாறு சாலையில் 4 கி.மீ. தொலைவில் உள்ளது.

## 45/வ.45. இன்னம்பர் (இன்னம்பூர் - 612 303)

"-இட்டமுடன்
என்னம்பர் என்னம்பர் என்று அயன்மால் வாதுகொள
இன்னம்பர் மேவிநின்ற என் உறவே" (46)

மிக விரும்பிய எமது வானகத் தலைவர் என்றும் எமது நற்குண பூரணன் என்றும் திருமாலும் நான்முகனும் வாதிட்டுக் கொள்ளும் திரு இன்னம்பரின் எமது உயிர் உறவே!

**எழுத்தறி நாதர் - நித்திய கல்யாணி**

அகத்தியர் வழிபட்டு இலக்கண உபதேசம் பெற்ற தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. கும்பகோணம் திருவையாறு சாலையில் "திருப்புறம்பியம்" என்னும் கைகாட்டிப் பாதையில் 3.கி.மீ. தொலைவில் உள்ளது.

## 46/வ.46. திருப்புறம்பயம் - 612 303

" - முன்னம்பு
மாற்கும் புறம்பியலா வாய்மையருள் செய்யவுளம்
ஏற்கும் புறம்பியம் வாழ் என் உயிரே" (47)

ஆதிநாள் முதல் சக்கரம் பெற வழிபாடு செய்த திருமாலை உண்மை அன்புடன் காளைவாகனமாய் ஏற்று அருள் வழங்கிய திருப்புறம்பியத்து எனது உயிரே!

**சாட்சி நாதர் - கரும்பன்ன சொல்லி**

செட்டிப் பெண்ணுக்கு முறைப்படி மணவினை நடைபெற்றதாக சாட்சி சொன்னவர் என்பது திருவிளையாடல் புராணம். மூவர் பாடல் பெற்றது. முன்கூறிய இன்னம்பர் சென்றபின் மேலும் 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது.



## 47/வ.47. திருவிசயமங்கை - 612 301

"-மாற்கருவின்
கண்விசைய மங்கைக் கனிபோல் பெறத் தொண்டர்
எண்விசைய மங்கையில் வாழ் என்குருவே" (48)

கருப்பையுள் புகாத வெற்றியைப் பெற்ற அடியவர்கள் எண்ணிப் போற்றும் திருவிசையமங்கையில் வாழ்கின்ற எமது சற்குருவே!

**விஜயநாதர் - மங்கைநாயகி**

அர்ச்சுனன் வழிபட்டதலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. கும்பகோணத்திலிருந்து திருவைகாவூர் - திருவைகாவூரிலிருந்து ஆற்றோரம் 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

## 48/வ.48. திருவைகாவூர் - 612 304

"- மண்ணுலகில்
வைகாவூர் நம் பொருட்டான் வைகியதென் றன்பர் தொழும்
வைகாவூர் மேவிய என்வாழ் முதலே" (49)

தேவர் உலகத் திருவூர் ஒன்று, தம் மேன்மை கருதி மண்ணுலகில் திருவைகாவூராகியது என்று அன்பர்கள் வணங்கும் என் வாழ்வின் வைப்பே!

**வில்வ வன நாதர் - வளைக்கை நாயகி**

சிவராத்திரியில் புலிக்குப் பயந்து வில்வமரத்தில் ஏறி வேடன் ஒருவன் இரவு தூங்காமல் வில்வத்தைப் பறித்துப் போட்டுக் கொண்டிருக்க விடியலில் இறைவன் வெளிப்பட்டு அவ்வேடனுக்கு அருள்புரிந்த தலம். சிவராத்திரிக்குச் சிறப்புடைய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. மூலவர் சுயம்புமூர்த்தி. கும்பகோணத்திலிருந்து நகரப்பேருந்து வசதி உண்டு.

## 49/வ.49. வடகுரங்காடு துறை - 614 202
## (ஆடுதுறை பெருமான் கோயில்)

"- உய்யும் வகைக்
காத்தும் படைத்தும் கலைத்தும் நிற்போர் நாடோறும்
ஏத்தும் குரங்காட்டின் என்னட்பே" (50)

உயிர்க்குலம் மேம்படும் வகையில் காத்தும் படைத்தும் சம்கரித்தும் நிற்பவர்களாகிய திருமால், பிரமன், உருத்திரர்கள் தினந்தோறும் துதிக்கின்ற வடகுரங்காடுதுறை வாழும் என் சிநேகிதமே!

**தயாநிதீஸ்வரர் - அழகு சடைமுடியம்மை**

வாலி வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. கும்பகோணம் - திருவையாறு சாலையில் கபிஸ்தலம் தாண்டி உள்ளது.

## 50/வ.50. திருப்பழனம் - 613 204

"- மாத்தழைத்த
வண் பழனத்தின் குளிவெண் வாயிற்றேன் வாக்கியிட
உண் பழனத் தென்றன் உயிர்க்குயிரே" (51)

மாமரத்தின் மாங்கனிகளில் இருந்து பெருகும் தேன்துளிகளை நத்தைகள் உண்கின்ற திருப்பழனத்து விளங்கும் என் உயிர்க்குயிரே!

**ஆபத் சகாயர் - பெரிய நாயகி**

சந்திரன் வழிபட்ட தலம். அப்பூதியடிகள் வாழ்ந்த திங்களூர் அருகில் உள்ளது. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. சப்த ஸ்தான விழா நடக்கும் ஏழூர்களில் ஒன்று. திருவையாற்றிற்கு அருகில் உள்ளது.



## 51/வ.51. திருவையாறு - 613 204

"- பண்பகன்ற
வெய்யாற்றில் நின்றவரை மெய்யாற்றில் ஏற்று திரு
ஐயாற்றின் மேவிய என் ஆதரவே" (52)

பண்பாடற்றுப் பிறவிக்குக் காரணமானவரை துன்பக் கடலினின்று கரையேறச் செய்து நல்வழியில் நடத்துவிக்கும் திருவையாறு விளங்கிய எனது ஆதாரமே!

**ஐயாற்றீசர் - அறம் வளர்த்த நாயகி**

அப்பருக்குக் கயிலைக் காட்சி அருளிய பதி. இறைவர் தன்னைத் தானே பூசிக்கும் இடம். மூவராலும் பாடல் பெற்றது. சுயம்புமூர்த்தி. சப்த ஸ்தானங்களில் மையமான ஊர். தஞ்சையிலிருந்து 11 கி.மீ. கும்பகோணத்திலிருந்தும் செல்லலாம்.

## 52/வ.52. திருநெய்த்தானம்
## தில்லைஸ்தானம் - 613 203

"- பொய்யகற்றி
மெய்த்தான(ம்) நின்றோர் வெளித்தான (ம்) மேவுதிரு
நெய்த்தானத் துள்ளமர்ந்த நித்தியமே"(53)

( பாய்மையை நீக்கி மெய்வழிநிற்போரை சிவஞானத் தகுதிக்கு உள்ளாக்கும் திருநெய்த்தானத்து அழியாப் பொருளே!

**நெய்யாடியப்பர் - பாலாம்பிகை**

சரஸ்வதி, காமதேனு, கௌதம முனிவர் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. திருவையாற்றுக்கு மிகவும் அருகில் உள்ளது. சப்த ஸ்தானங்களில் ஒன்று.

## 53/வ.53. பெரும்புலியூர் - 613 203

"- மைத்த
கரும்புலியூர்க் காளையொடுங் கண்ணோட்டம் கொள்ளும்
பெரும்புலியூர்வாழ் கருணைப் பேறே"(54)

கரிய நிறத்துப் புலியும் வெண்மைநிறத்துக் காளையும் உறவாடி வாழும்படி யருளும் பெரும்புலியூர் அருள்நிறைவே!

**வியாக்ரபுரீஸ்வரர் - சௌந்தரநாயகி**

வியாக்ர பாதர் (புலிக்கால் முனிவர்) வழிபட்ட 5 புலியூர்களில் ஒன்று. சம்பந்தர் பாடல் பெற்றது. தில்லை ஸ்தானத்திற்கு வலப்புறம் பிரியும் சாலையில் 4.கி.மீ. தொலைவில் உள்ளது.

## 54/வ.54. திருமழபாடி - 621 851

"- விரும்பி நிதம்
பொன்னுங் கௌத்துவமும் பூண்டோன் புகழ்ந்தருளை
மன்னு மழபாடி வச்சிரமே" (55)

திருமகளையும் கௌத்துவ மாலையையும் மார்பில் தரித்த திருமால் பாராட்டிப் பணிகின்றதனால் திருவருளை மேவுறச் செய்யும் திருமழபாடியின் வைரத்தூணே.

**வைரத்தூண்நாதர் - அழகம்மை**

நந்திதேவர் திருமணம் நடந்த ஊர். பிரமனின் சத்தியலோக சிவலிங்கத்தைப் புருஷாமிருகம் இங்குப் பிரதிஷ்டை செய்த பதி. மூவரும் பாடியது. அரியலூர், திருச்சி, திருவையாறு ஆகிய இடங்களிலிருந்து வரலாம்.



## 55/வ.55. திருப்பழுவூர் (கீழப்பழுவூர் - 621 707)

- துன்னுகின்ற
நாய்க்குங் கடையேன் நவைதீர நற்கருணை
வாய்க்கும் பழுவூர் மரகதமே"(56)

தெருநாயினுக்கும் இழிந்தவனாகிய எனது, துன்பமகலச் சீரிய கருணை ஈந்திடும் திருப்பழுவூர் மரகத மணியே!

**ஆலந்துறையார் - அருந்தவ நாயகி**

அம்பிகை தவம் செய்த பதி. பரசுராமர் பாவம் நீக்கிய பதி ஜமதக்னி முனிவருக்குக் காட்சி கொடுத்த பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. (பழு - ஆலமரம்; ஆல் தல விருட்சம் ஆதலின் பழுவூர் எனப் பெயர் பெற்றது) திருச்சி - அரியலூர் சாலையில் உள்ளது.

## 56/வ.56. திருக்கானூர் - 613 105

"- தேய்க் களங்கில்
வானூர் மதிபோன் மணியாற் குமுதமலர்
கானூர் உயர் தங்கக் கட்டியே" (57)

வளர்ந்தும் குறையும் இயல்புடைய வானத்து நிலவினைப் போல் நீலமணிகளால் அல்லி மலர்க்காட்டினை அழகொளிரச் செய்யும் திருக்கானூரின் தங்கக்கட்டியே!

**செம்மேனி நாதர் - சிவலோக நாயகி**

அக்கினி வழிபட்ட தலம், சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. கோயில் கொள்ளிடக்கரையில் மணலில் புதைந்துபின் தென்பட்டதால் மணல்மேடு என வழங்கப்படுகிறது. திருவையாறு - திருகாட்டுப் பள்ளி தாண்டி வந்து வழிகேட்டு மிதிவண்டியில் செல்ல வேண்டும்.

## 57/வ.57. அன்பிலாந்துறை
## (கீழ்அன்பில்/அம்பில்/அன்பில் - 621 702)

"- நானூறு
கோலந் துறைகொண்ட கோவையருள் கோவை மகிழ்
ஆலந்துறையின் அணிமுத்தே" (58)

நானூறு அகப்பொருள் தலைப்புகளால் இனிதே பாடப்பெற்ற திருக்கோவையார் என்னும் திருநூலை அருளிய மணிவாசகரை மகிழ்ந்தேற்கும் திருஆலந்துறை எழில்முத்தே.

### ஆலந்துறையார் - சௌந்தரநாயகி

வாகீச முனிவர், பிரமன் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. திருச்சியிலிருந்தும் லால்குடியிலிருந்தும் செல்லலாம்.

~~~~~

## 58/வ.58. திருமாந்துறை - 621 703

"- நீலங்கொள்
தேந்துறையில் அன்னமகிழ் சேக்கை பல நிலவும்
மாந்துறைவாழ் மாணிக்க மாமலையே" (59)

கருங்குவளை மலர்களைக் கொண்ட நீர்ப்பகுதியில் அன்னப் பறவைகளின் இருக்கை பல விளங்குகின்ற திருமாந்துறை மாணிக்க மலையே!

### ஆம்ரவனேஸ்வரர் (மாங்காட்டீசர்) - அழகம்மை

ஆம்ரம் = மா மரம்; ஆம்ரவனம் - மாந்துறை; சூரியன், சந்திரன், இந்திரன், மிருகண்டு முனிவர் வழிபட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது. தாயை இழந்த மான்குட்டிக்காக இறைவனே தாய் மானாகிய பதி. லால்குடியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

33

## 59/வ.59. திருப்பாற்றுறை - 620 005
## (திருப்பாலத்துறை)

"- ஏந்தறிவாம்
நூற்றுறையில் நின்றவர்கள் நோக்கி மகிழ்வெய்தும் திருப்
பாற்றுறையில் நின்ற பரஞ்சுடரே" (60)

நல்லறிவூட்டும் தெய்வீக நூல்களைப் பயின்றவர்கள் கண்டு களி கொள்ளும் திருப்பாற்றுறை பரஞ்சுடரே!

### ஆதிமூல நாதர் - நித்திய கல்யாணி

மூலவர் சுயம்புமூர்த்தி. மார்க்கண்டேயர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. இக்கோயில் இறைவியை வழிபட்டால் மகப்பேறு கிட்டும். பிணி தீரும். திருவானைக்காவிலிருந்து 10. கி.மீ. திருஎறும்பூர் இரயில்வே நிலையத்திலிருந்து 7 கி.மீ.

~~~~~

## 60/வ.60. திருஆனைக்கா - 620 005

"- நாற்றிசையும்
தேனைக்காவுள் மலர்கள் தேங்கடலென் றாக்குவிக்கும்
ஆனைக்கா மேவியமர் அற்புதமே" (61)

நான்கு திக்குகளிலுமுள்ள சோலைகள் கடல்போலும் தேனைப் பெருக்கிநிற்கும் திருவானைக்காவில் வீற்றிருக்கின்ற அற்புதமே!

### ஜம்புகேஸ்வரர் - அகிலாண்டேஸ்வரி

பஞ்ச பூதத் தலங்களில் அப்புத் (நீர்) தலம். பிரமன், சிலந்தி, யானை, அஷ்டவசுக்கள், அம்பிகை, பராசரர் வழிபட்டது. மூவரும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரரும் பாடியது. இங்கு வழிபட்ட சிலந்தியின் அடுத்த பிறப்பே கோச்செங்கட் சோழநாயனார். திருச்சியிலிருந்து நகரப்பேருந்து உண்டு.

## 61/வ.61. திருப்பைஞ்ஞீலி - 621 005

" - மானைப்போல்
மைஞ்ஞீல வாட்கண் மலராள் மருவுதிருப்
பைஞ்ஞீலி மேவும் பரம்பரமே'' (62)

மானினைப் போல் நீலமலர்க்கண்களை உடைய உமையவள் ஒருபாகத்தில் சார்ந்து விளங்கும் திருப்பைஞ்ஞீலியின் மேலான தெய்வமே!

**நீலகண்டேஸ்வரர் - விசாலாட்சி**

இறைவர் அப்பருக்குப் பொதிசோறளித்துப் பசி நீக்கிய தலம். வசிட்ட முனிவருக்கு நடராசப் பெருமான் நடனக்காட்சியருளியது. மூவரும் பாடியது. (பைஞ்ஞீலி - பசிய வாழை தல மரம்) திருச்சியிலிருந்து மணச்சநல்லூர் வழியாகப் பேருந்தில் செல்லலாம்.

## 62/வ.62. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி - 621 216)

" - எஞ்ஞான்றும்
ஏச்சிரா மங்கலத்தோடின் பந்தரும் பாச்சி
லாச்சிராமஞ் சேர் அருள் நிலையே'' (63)

எக்காலத்தும் இழிவுபடாத மங்கல நிலையுடன் தெய்வீக இன்பமளிக்கும் திருப்பாச்சிலாச்சிராமம் வாழும் கருணைக் கடவுளே!

**மாற்றறிவரதர் - பாலாம்பிகை**

சுந்தரர் மாற்று குறையா பொன் பெற்ற தலம். கொல்லி மழவன் மகளுக்கு ஏற்பட்ட ''முயலகன்'' என்னும் நோயைச் சம்பந்தர் நீக்கிய பதி. சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. திருச்சி - சேலம் சாலையில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது.



## 63/வ.63. திரு ஈங்கோய் மலை (திருவிங்க நாத மலை - 621 209)

" - நீர்சறியா
ஈங்கோய் மலைப் பிறவி யார்கலிக்கோர் வார்கலமாம்
ஈங்கோய் மலைவாழ் இலஞ்சியமே'' (64)

அளவுகடந்து பெருகும் பிணிக்குழ் உயரிய கப்பலாகிப் கரைவியற்ற பெருங்கரையில் சேர்ப்பதற்குத் துணையாகி நிற்கும் திருஈங்கோய்மலையில் வாழ்ந்தருளும் அருள் நீர்நிலையே!

**மரகத நாதர் - மரகத வல்லி**

மரகத லிங்கம் உள்ளது. அம்பிகை, அகத்தியர் வழிபட்டது. அருகில் வாட்போக்கி, கடம்பந்துறை தலங்கள் உள்ளன. இம்மூன்று கோவில்களையும் ஒரே நாளில், காலை கடம்பர்கோயில், நண்பகல் வாட்பேக்கி, மாலை ஈங்கோய் மலை தரிசித்தால் புண்ணியம் என்பர். சம்பந்தர் பாடல் பெற்றது. திருச்சி சேலம் பாதையில் முசிறிக்கு அருகில் உள்ளது.

*வள்ளற் பெருமான் இறுக்கம் இரத்தின முதலியாருக்கு 20.3.1861 இல் எழுதிய திருமுக (கடித) த்தில் விண்ணப்பக் கலிவெண்பா பற்றிய செய்தி.*

*''விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல் இவைகளை அங்கிருந்து இங்கு வந்திருந்து பிரயாணப்பட்டங்கு வருகின்ற பெரிய தமக்கையார் வசத்தில் சுமார் ஒரு மாதமாயிற்று கொடுத்தனுப்பினேன். அவாள் மத்தியில் கருங்களவால் கையில் மெய்யில் உள்ளவைகளெல்லாம் இழந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அவாள் இன்னு மத்தியில் பந்துக்களிடமாக இருக்கின்றார்கள் போலக் காணுகின்றது. ஆகலின் அவர்கள் அவ்விடம் வந்தவுடன் மேற்படி புத்தகங்களைச் சேர்ப்பிப்பதும் அல்லாததும் உடனே அவசியம் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும்''.*

*இதிலிருந்து விண்ணப்பக் கலிவெண்பா 1861 ஆம் ஆண்டுக்கு முன்னரே வள்ளலாரால் பாடப்பெற்றது என்பது தெரிகிறது.*

## காவிரி தென்கரைத் தலங்கள் - 127

(விண்ணப்பக் கலிவெண்பா கண்ணி 65 முதல் 191 வரை)

### 64/தெ.1. திருவாட்போக்கி (ஐயர்மலை, ரத்னகிரி, சிவாயமலை 639 124)

" - ஓங்காது
நாட்போக்கி நிற்பார் நவையுடையார் நாடரிதாம்
வாட்போக்கி மேவுகின்ற வள்ளலே" (65)

வாழ்வில் உயர்நிலை அடைய முடியாமல் தினமும் வீணாய்க் கழிக்கும் துன்பமுடையவர் அடைவதற்கு அரிதாகிய திருவாட்போக்கியில் விளங்கும் அருள்வள்ளலே!

**இரத்னகிரீசர் - சுரும்பார் குழலி**

சுயம்புமூர்த்தி. அகத்தியர், ஆதிசேஷன் வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. திருச்சி மாவட்டம் குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் வழியில் உள்ளது.

~~~~~

### 65/தெ.2. கடம்பந்துறை (கடம்பர்கோவில் / குழித்தலை / குளித்தலை - 639 104)

" - நேர்போக்கி
நில்லுங் கடம்ப நெறிபோல் அளப்பூவை
சொல்லுங் கடம்பந்துறை நிறைவே" (66)

பொய்மை வாழ்வகன்று உயர்நெறி ஒன்றில் பழகி மேம்படுக என நாகணவாய்ப் பறவை அறங்கூறும் திருக்கடம்பந்துறை அருட்பூரணமே!

**கடம்ப வன நாதர் - முற்றிலா முலையாள்**

கண்வ முனிவருக்கு இறைவன் கடம்பமரத்தில் காட்சி அருளியது. சப்த கன்னிகைகளின் பிரமஹத்திதோஷம் நிவர்த்தியான பதி. அப்பர் பாடல் பெற்றது. திருச்சி - ஈரோடு பாதையில் உள்ளது.

37

### 66/தெ.3. திருப்பராய்த்துறை - 639 115

" - மல்லலொடு
வாழும் பராய்த்துறைவான் மன்னவரு மன்னவருஞ்
சூழும் பராய்த்துறை வாழ் தோன்றலே"(67)

வெற்றியொடு விளங்கும் தேவர்கள் போற்றும் இந்திரன், மகேந்திரன் முதலிய வானகத்து வேந்தர்களும், மண்ணுலகத்து மன்னர்களும் துதிக்கச் சூழ்கின்ற திருப்பராய்த்துறை தெய்வமே!

**பராய்த்துறை நாதர் - பசும்பொன் மயிலாம்பாள்**

இறைவன் பிட்சாடனராய்ச் சென்று தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அடக்கி அருள்புரிந்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. திருச்சியிலிருந்து கரூர், குளித்தலை செல்லும் வழியில் உள்ளது.

~~~~~

### 67/தெ.4. கற்குடி (உய்யக் கொண்டான் மலை உய்யக் கொண்டான் திருமலை - 620 102)

" - கூழும்பல்
நற்குடியும் ஓங்கி நலம்பெருகு மேன்மைதிருக்
கற்குடியிற் சந்தான கற்பகமே" (68)

பயிர் வகைகளும், நான்கு வகைக் குடிமக்களும் வளர்ந்தோங்கி நன்மை அடையும் திருக்கற்குடியில் ஓங்கும் தெய்வ மரபுடைய கற்பகத் தருவே!

**கற்பக நாதர் - அஞ்சனாட்சி (மைவிழியம்மை)**

இறைவன் சுயம்புமூர்த்தி. மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்த தலம். மூவரும் பாடியது. திருச்சியிலிருந்து பேருந்து வசதி உள்ளது. அருணகிரிநாதர் அருள்பெற்ற வயலூர் முருகன்கோயில் அருகிலுள்ளது.

## 68/தெ.5. மூக்கீச்சுரம் (உறையூர்) - திருச்சி 620 003

"-சிற்சுகத்தார்
பிற்சநந மில்லாப் பெருமைதரும் உறையூர்ச்
சற்சனர்சேர் மூக்கீச் சரத்தணியே" (69)

மெய்ஞ்ஞான இன்பத்தை ஒரே பிறவியில் தந்தருளும் (பெருமைமிக்க உறையூர் என்றழைக்கப்பட்டு குணவான்கள் ஒன்று சேரும் முக்கிய திருப்பதியாகிய) திருமூக்கீச்சரத்துள் விளங்கும் அழகு நிலையே!

**பஞ்ச வர்ணேஸ்வரர் - காந்திமதி**

சுயம்பு மூர்த்தி. உதங்க முனிவருக்கு இறைவன் ஐந்து காலங்களில் ஐந்து வண்ணங்களோடு காட்சி தந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. உறையூர், திருச்சி நகரின் ஒருபகுதி.

~~~~~

## 69/தெ.6 திருச்சிராப்பள்ளி - 620 002

" - மற்செய்
அராப்பள்ளி மேவு மவனின்று வாழ்த்துஞ்
சிராப்பள்ளி ஞானத் தெளிவே" (70)

அச்சம் உண்டாக்கும் ஆதிசேடனைப் பாயலாய்க் கொண்டு விளங்கும் திருமால் போற்றும் "திருச்சிராப்பள்ளி" ஞானசாரமே!

**தாயுமானவர் - மட்டுவார் குழலி**

பெண் ஒருத்திக்கு அப்பனே, அம்மையாகி பிள்ளைப் பேறு பார்த்த தலம். எனவே இத்தலத்தை வழிபட்டு சம்பந்தர் அருளிய 'நன்றுடையானை' பதிகத்தைப் பாராயணம் செய்தால் சுகப்பிரசவம் ஆகும். மௌன குரு, தாயுமானவர் வழிபட்டது. உச்சிப்பிள்ளையார் கோவில் உடையது. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

39

## 70/தெ.7. திருஎறும்பியூர் (திருவெறும்பூர் - 620 013)

" - இராப்பள்ளி
நின்றெழல் மெய்யன்றெனவே நேர்ந்துலகு வாழ்த்துகின்ற
நன்றெறும்பி யூரிலங்கு நன்னெறியே" (71)

இரவு படுத்துறங்கித் திரும்ப எழுதல் உறுதியல்ல என்பதை உணர்ந்தோர் வாழ்த்தி வணங்கும் திருஎறும்பூரின் கொல்லா நெறியானே!

**எறும்பீசர் - நறுங்குழல் நாயகி**

தென்கயிலை. இந்திரனும் தேவர்களும் எறும்பு வடிவு கொண்டு வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. திருச்சியிலிருந்து நகரப் பேருந்து உண்டு.

~~~~~

## 71/தெ.8. திருநெடுங்களம் - 620 015

" - துன்றுகயற்
கண்ணார் நெடுங்களத்தைக் கட்டறுத்த மெய்த்தவர்சூழ்
தண்ணார் நெடுங்கள மெய்த் தாரகமே" (72)

கயல்மீனைப் போலும் அழகிய விழிகளை உடைய மாதர் மயலைப் போக்கடிக்கும் வல்லபம் உடைய உண்மைத் தவமுடையோர் போற்றும் திருநெடுங்களம் என்னும் திருப்பதியில் விளங்கும் மெய்ப்பொருளே!

**நெடுங்கள நாதர் - ஒப்பிலா நாயகி**

சம்பந்தர் இடர்களையும் திருப்பதிகம் அருளப் பெற்றது. திருச்சி மெயின் கார்டு கேட்டிலிருந்து நகரப்பேருந்து வசதி. திருச்சி மங்காவனம் நகரப்பேருந்து இத்தலம் வழியாகச் செல்லும்.

## 72/தெ.9. மேலைத் திருக்காட்டுப்பள்ளி
## (திருக்காட்டுப்பள்ளி - 613 104)

" - எண்ணார்
தருக்காட்டுப் பள்ளித் தகைகொண்டோர் சூழுந்
திருக்காட்டுப் பள்ளியில்வாழ் தேனே" (73)

சிறந்து ஓங்கும் தகுதிபெற்றவரும் தருக்களும் சூழிடமுடைய திருக்காட்டுப்பள்ளி என்னும் திருப்பதியில் வாழ்கின்ற மகாதேவனே!

**தீயாடியப்பர் - அழகம்மை**

அக்கினி வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. திருச்சி, தஞ்சை, திருவையாறு, கல்லணை முதலிய இடங்களிலிருந்து பேருந்து உண்டு. கீழைத் திருக்காட்டுப் பள்ளி காவிரி வடகரைத்தலமாகும்.

~~~~~

## 73/தெ.10. திருஆலம்பொழில் - 613 103
## (திருவாம்பொழில்)

" - மருக்காட்டு
நீலம் பொழிற்குள் நிறைநாங்கள் சேர் காட்டும்
ஆலம் பொழிற் சிவயோகப் பயனே" (74)

கருநீல குவளைமலர் சூழ் பொழில்கள் ஓங்கி விளங்கும் திருஆலம் பொழில் என்னும் தெய்வப்பதியில் எல்லாம் தாமேயாகி விளங்கும் சிவயோகப் பயனே!

**ஆத்மநாதேஸ்வரர் - ஞானாம்பிகை**

அப்பர் பாடல் பெற்றது. திருவையாற்றிலிருந்து பூதலூர் வழியாகத் திருச்சி செல்லும் பேருந்தில் இத்தலத்தை அடையலாம்.

## 74/தெ.11. திருப்பூந்துருத்தி - 613 103

" - சீலநிறை
வாந்துருத்தி கொண்டுள்ளனல் எழுப்புவோர் புகழும்
பூந்துருத்தி மேவு சிவ புண்ணியமே"(75)

நற்குண நற்செயலான பிராணப்பயிற்சி மூலம் மூலாக்கினியை எழுப்பி வாழ்கின்றவர் போற்றும் திருப்பூந்துருத்தியின் சீவகாருணிய மூர்த்தியே!

**புஷ்பவனேஸ்வரர் - சௌந்தர நாயகி**

சப்த ஸ்தானங்களில் ஒன்று. திருவிசைப்பா பாடிய நம்பி பூந்துருத்திக் காடவநம்பி அவதாரத் தலம். சம்பந்தர் பல்லக்கை அப்பர் தோளில் சுமந்த தலம். அப்பர் திருமடம் உள்ள பதி. அப்பர் பாடல் பெற்றது. திருக்கண்டியூரிலிருந்தும் திருவையாற்றிலிருந்தும் செல்லலாம்.

~~~~~

## 75/தெ.12. திருக்கண்டியூர் - 613 202

" - காந்தருவத்
தண்டியூர் போற்றுந் தகைகாசிக்கட் செய்து
கண்டியூர் வாழும் களைகண்ணே" (76)

தேவருலக அமராவதி போற்றும் சீலமுடைய செயல் உருத்திரமூர்த்தியின் கையில் ஒட்டிய பிரம கபாலம் அகலும்படிச் செய்தது. அவ்விடம் காசிநகர். அப்பிரமனுடைய சிரம் கொய்த இடமாதலால் காசி போல் சிறந்து ஓங்கும் திருக்கண்டியூரின் வாழும் எம் துன்ப நீக்கமே!

**வீரட்டேஸ்வரர் - மங்களநாயகி**

அட்ட வீரட்டங்களுள் பிரமன்தலை கொய்யப்பட்ட தலம். பிரமஹத்தி தோஷம் நீங்கும் பதி. அப்பர் பாடல் பெற்றது. சப்த ஸ்தானங்களுள் ஒன்று. தஞ்சை - திருவையாறு வழியில் உள்ளது.

## 76/தெ.13. திருச்சோற்றுத்துறை - 613 202

" - கொண்டியல்பின்
வேற்றுத் துறையுள் விரவாதவர் புகழுஞ்
சோற்றுத் துறையுட் சுகவளமே" (77)

வேறு வேறு பட்ட சமய மதச் சார்புகளில் பழகிடாத மேலோர் புகழும் திருச்சோற்றுத்துறை வாழ்கின்ற இன்பச் செழிப்பே!

**சோற்றுத்துறை நாதர் - அன்னபூரணி**

சப்த ஸ்தானங்களுள் ஒன்று. மிகவும் பஞ்ச காலத்தில் இறைவன் அட்சய பாத்திரம் வழங்கி அனைவரின் பசியையும் போக்கிய தலம். பிறவிப் பிணி தீர இறைவன் வீடுபேறும் அளிக்கும் தலம். மூவரும் பாடியது. திருவையாற்றிலிருந்து பேருந்து உள்ளது.

~~~~~

## 77/தெ.14. திருவேதிகுடி - 613 202

" - ஆற்றலிலாத்
தீதிக்குடி யென்று செப்பமா ரமருவும்
வேதிக்குடி யின்ப வெள்ளமே" (78)

தயவியல்பு இல்லாத தாழ்ந்த குடியினர் வாழ்ந்திடாத திருவேதிக்குடியில் வாழ்கின்ற இன்பமே!

**வேதபுரீசுவரர் - மங்கையர்க்கரசி**

சப்த ஸ்தானங்களுள் ஒன்று. பிரமன் பூசித்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இத்தலத்து இறைவரை வழிபட்டு, சம்பந்தர் திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால் திருமணம் விரைவில் கூடிவரும். தஞ்சை - திருவையாறு சாலையில் உள்ளது.

~~~~~

## 78/தெ.15. தென்குடித்திட்டை (திட்டை-614 206)

" - கோதியலும்
வன்குடித் திட்டை மருவார் மருவு திருத்
தென்குடித் திட்டைச் சிவபதமே" (79)

காருண்யமில்லாக் கல்மனத்தினர் பொருந்தாது ஓங்கிடும் திருத்தென்குடித் திட்டை சிவநிலையே!

**பசுபதி நாதர் - உலகநாயகி**

பிரளயகாலத்தில் இப்பகுதி மட்டும் திட்டாகத் தோன்றியது. அங்கு இறைவன் சுயம்புவாகத் தோன்றினான். கோயில் விமானத்துள் சந்திரகாந்தக்கல் உள்ளது. கும்பகோணம் - திருக்கருகாவூர் நகரப் பேருந்தில் செல்லலாம்.

~~~~~

## 79/தெ.16. திருப்புள்ளமங்கை
## (பசுபதிகோயில் - 614 206)

" - நன்குடைய
உள்ள மங்கை மார்மே லுறுத்தாதவர் புகழும்
புள்ள மங்கை வாழ் பரம போகமே" (80)

உள்ளத்தினை மகளிரின் காமியத்தில் பொருந்தாமல் வாழ்பவர் புகழும் திருப்புள்ளமங்கையின் மேலான இன்பமே!

**பசுபதீஸ்வரர் - சௌந்தரநாயகி**

தேவர்கள் அமுதம் பெறப் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய ஆலகால நஞ்சை இறைவன் உண்ட திருப்பதி. சம்பந்தர் பாடியது. திருவையாறு - கும்பகோணம் வழியில் உள்ளது.

~~~~~

## 80/தெ.17. சக்கரப்பள்ளி (ஐயம்பேட்டை - 614 201)

" - கள்ளமிலஞ்
சக்கரப் பள்ளிதனில் தாம்பயின்ற மைந்தர்கள் சூழ்
சக்கரப் பள்ளிதனில் தண்ணளியே"(81)

கள்ளங்கபடு இல்லாமல் பஞ்சாக்கரத்தைப் போற்றிப் பழகிடும் நன்மைசான்ற ஆடவர்கள் விளங்குகின்ற திருச்சக்கரப்பள்ளி பேரிரக்கமே!

**சக்ரவாகேஸ்வரர் - தேவநாயகி**

திருமால் வழிபட்டுச் சக்ராயுதம் பெற்ற தலம். சம்பந்தர் பாடியது. கும்பகோணம் தஞ்சாவூர் சாலையில் உள்ளது.

## 81/தெ.18. திருக்கருகாவூர் - 614 302

" - மிக்க
அருகாவூர் சூழ்ந்தே அழகு பெற வோங்கும்
கருகாவூர் இன்பக் கதியே"(82)

மிகுந்த அழகுடைய சோலைகள் சூழ்ந்து எழில் பெற விளங்கும் திருக்கருகாவூர் என்னும் திருப்பதியின் பேரின்ப நிலையே!

**முல்லைவன நாதர் - கருக்காத்த நாயகி**

இத்தலத்தை வழிபடுவோர்க்குக் கரு காக்கப் பெற்று பேறு காலத்தின் வேதனைகள் நீங்கி நன்மகவு பிறக்கும். சம்பந்தர், அப்பர் பாடியது. தஞ்சையிலிருந்து பேருந்து வசதி உண்டு.

## 82/தெ.19. திருப்பாலைத்துறை - 614 205

" - முருகார்ந்த
சோலைத் துறையிற் சுகஞ்சிவநூல் வாசிக்கும்
பாலைத் துறையிற் பரிமளமே"(83)

எழிலார்ந்த சோலைப்பகுதிகளில் கிளிக்கூட்டங்கள் சிவாகம நூல்களை ஓதும் சிறப்புடைய திருப்பாலைத்துறை அருள் மணமே!

**பாலைவன நாதர் - தவளவெண் நகையாள்**

இறைவன் தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய புலியைக் கொன்று அதன் தோலை உடுத்திய தலம். "மண்ணினார் மறவாது 'சிவாய' என்று, எண்ணினார்க்கு இடமா எழில் வானகம், பண்ணினார்" என்று அப்பர் பாடிய தலம். கும்பகோணம் - தஞ்சை வழியில் உள்ளது.

## 83/தெ.20. திருநல்லூர் - 614 208

" - சீலத்தர்
சொல்லூ ரடியப்பர் தூய முடிமேல்வைத்த
நல்லூர் அமர்ந்த நடுநாயகமே" (84)

ஜீவ காருணியம் உடையவர்கள் பாராட்டிச் சொல்லும் திருநாவுக்கரசரின் திருமுடிமேல் திருவடி வைத்தருளிய திருநல்லூர் தண்ணருட் தலைவனே!

**கல்யாணசுந்தரர் - கல்யாண சுந்தரி**

சுயம்பு மூர்த்தி. அப்பருக்குத் திருவடி சூட்டிய தலம். அப்பர் "நனைந்தனைய திருவடி என்தலைமேல் வைத்தார்" எனக் குறிப்பிட்டுப் பதிகம் பாடியுள்ளார். அமர்நீதி நாயனாரை ஆண்டு கொண்டதலம். சிவலிங்கத் திருமேனி ஒரே நாளில் 5 முறை நிறம் மாறுகிறது. பிருங்கிமுனிவர் வண்டுருபத்தில் வழிபட்டதால் சிவலிங்கத்தில் துளைகள் உள்ளன. குந்திதேவி கர்ணனைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்ட பாவம் தீர்ந்த பதி. சம்பந்தரும் பாடியுள்ளார். தஞ்சை - கும்பகோணம் சாலையில் பிரியும் வலங்கைமான் சாலையில் 2. கி.மீ.தொலைவில் உள்ளது.

## 84/தெ.21. திருஆவூர்ப் பசுபதீச்சுவரம்
## (ஆவூர் - 612 701)

" - மல்லார்ந்த
மாவூர் இரவியின் பொன் வையமளவுஞ் சிகரி
ஆவூரில் உற்ற எங்கள் ஆண்டகையே" (85)

பிரகாச வலிமை நிறைந்த தெய்வக் குதிரைகள் உடைய தேரினில் கதிரவன் ஊர்வதால் விண்ணுலகினைப் பொன்னுல காக்கும் பூரண கிருபை உடைய திருஆவூர் அருள்தலைவனே!

**பசுபதீஸ்வரர் - மங்களாம்பிகை**

வசிட்டரால் சாபம் பெற்ற பசு (ஆ) காமதேனு இங்கு வழிபட்டுச் சாபம் நீங்கியது. சங்கப் புலவர்கள் ஆவூர்கிழார், ஆவூர் மூலங்கிழார் வாழ்ந்த ஊர். சம்பந்தர் பாடியது. கும்பகோணத்தி லிருந்து செல்லலாம்.

~~~~~

## 85/தெ.22. திருச்சத்தி முற்றம் (சக்திமுத்தம்) 612 703

" - ஓவாது
சித்தமுற்ற யோகஞ் செழும்பொழிலிற் பூவைசெயுஞ்
சத்தி முற்ற மேவுஞ் சதாசிவமே" (86)

இடைவிடாமல் அருட்சித்தி பெற்றிட சோலைதனில் கிளிகள் சிவயோக சாதனை செய்திடும் திருச்சக்திமுற்ற சதாசிவக்கடவுளே!

**சிவக்கொழுந்தீசர் - பெரியநாயகி**

இறைவனை உமை தழுவி வழிபட்ட தலம். அப்பர் திருவடி தீட்சை வேண்டிய தலம். அப்பர் பாடல் பெற்றது. நாரைவிடுதூது பாடிய சத்திமுற்றப் புலவர் இவ்வூரினர். கும்பகோணம் - ஆவூர் நகரப் பேருந்தில் செல்லலாம்.

47

## 86/தெ.23. (திரு) பட்டீச்சரம் - 612 703

" - பத்தியுற்றோர்
முட்டீச் சுரத்தின் முயலா வகையருளும்
பட்டீச் சுரத்தெம் பராபரமே" (87)

மனஉருக்கம் உடைய மாண்பினர்க்கு பிறவிப் பாலைவனத்தில் உழலா வழியைச் செய்தருளும் திருப்பட்டீசுவரத்து எம் மெய்ப்பொருளே!

**தேனுபுரீஸ்வரர் - ஞானாம்பிகை**

காமதேனுவின் மகள் பட்டி பூசித்த பதி. சம்பந்தருக்கு இறைவன் முத்துப் பந்தர் அருளிய பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. கும்பகோணம் ஆவூர் நகரப் பேருந்தில் சக்திமுற்றத்தில் இறங்கிச் செல்ல வேண்டும்.

~~~~~

## 87/தெ.24. (திருப்) பழையாறை

" - துட்டமயல்
நீங்கு விழையார் தமைவான் சென்றமரச் செய்விக்க
ஓங்கு பழையாறையில் என்னுள் ஞவப்பே" (88)

கேட்டினையே தரும் மும்மலத்தினையும் பஞ்சமா பாதகங்களையும் விரும்பாதவர்களை மறுமை இன்பத்தில் அடைவிக்கும் திருப்பழையாறையில் ஓங்கும் எம்தம் உள்ளக்களிப்பே!

**சோமேசர் - சோமகலாம்பிகை**

கருடன், ஆதிசேடன் வழிபட்ட தலம். இவ்வூரின் தெற்கிலும் வடக்கிலும் ஓடும் முடிகொண்டான் ஆறு முற்காலத்தில் பழையாறு எனப்பட்டதால் அதன் கரையிலுள்ள ஊர் பழையாறை எனப்பட்டது. தேவாரப் பாடல்பெற்ற தலம் பழையாறை வடதளியே. எனினும் பழையாறை பொதுவானால் பழையாறையும் போற்றப்படுகிறது.

## 88/தெ.25. திருப்பழையாறை வடதளி - 612 703

" - பாங்குபெற
ஆர்ந்த வட விலையான் அன்னத்தான் போற்றி நிதம்
சார்ந்த வட தளி வாழ் தற்பரமே"(89)

நாம் மேன்மை பெற ஆலிலைமேல் பள்ளி கொள்ளும் திருமாலும், அன்ன ஊர்தி உடைய பிரமதேவனும் தினமும் வணங்கிடும் திருவடதளியின் செழும் பொருளே!

**தர்மபுரீஸ்வரர் - விமலநாயகி**

பழையாறையின் வடகரையில் உள்ளதால் இப்பெயர் பெற்றது. (தளி=கோயில்) அப்பர் பாடல் பெற்றது. சமணர்களால் மறைக்கப்பட்ட சிவலிங்கத்தை அப்பர் உண்ணா நோன்பிருந்து வெளிப்படுத்திய இடம். மங்கையர்க்கரசியார், அமர்நீதிநாயனார் பிறந்த தலம். கோயிலுக்குப் பக்கத்தில் துறையூர் சிவப்பிரகாசர் சமாதி உள்ளது. கும்பகோணம் - ஆவூர் சாலையில் முழையூர் வழியாக இத்தலம் செல்லலாம்.

~~~~~

## 89/தெ.26. திருவலஞ்சுழி - 612 302

" - சேர்ந்த
மலஞ்சுழி கின்ற மனத்தர்க் கரிதாம்
வலஞ்சுழி வாழ் பொன்மலையே" (90)

மும்மலத்தால் பிறவிகள் தோறும் அஞ்ஞானத்தில் சுழல்கின்ற மனத்தவர் சிந்திப்பதற்கு அரிதாகிய திருவலஞ்சுழி வாழ் மாற்றறியாப் பொன்மலையே!

**வலஞ்சுழி நாதர் - பெரிய நாயகி**

வெள்ளை விநாயகர் தலம். "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" எனும் சம்பந்தர் பாடல் பெற்றது. சுவாமி மலைக்கு அருகில் உள்ளது.

49

## 90/தெ.27. குடமூக்கு (கும்பகோணம் - 612 001)

" - நிலஞ்சுழியா(து)
ஓணத்தில் வந்தோனுடன் துதித்து வாழ் கும்ப
கோணத்தில் தெய்வக் குலக் கொழுந்தே" (91)

பூமண்டலத் தேவியைக் காத்தளிக்க திருஓணத் திருநாளில் உதயமான திருமால் பூமகளுடன் போற்றி வாழும் கும்பகோணம் என்னும் திருத்தலத்தில் விளங்கும் பரசிவத் தெய்வத்தளிரே!

**கும்பேசுவரர் - மங்களாம்பிகை**

மகாமகத் தீர்த்தம். மூர்க்கநாயனார் தொண்டு செய்தது. சம்பந்தர், அப்பர் பாடியது. தஞ்சை - மயிலாடுதுறைக்கு இடையே உள்ளது.

~~~~~

## 91/தெ.28. குடந்தைக் கீழ்க் கோட்டம் (கும்பகோணம்) (நாகேசுர சுவாமி திருக்கோயில்)

" - மாணுற்றோர்
காழ்க் கோட்ட(ம்) நீங்கக் கருதுங் குடமூக்கிற்
கீழ்க்கோட்ட மேவுமன்பர் கேண்மையே" (92)

மாட்சிமை உடையவர்களின் மனமாசுகளை நீக்கும் நோக்கில் திருக்குடமூக்கு கீழ்க்கோட்டம் என்னும் திருத்தலத்து அன்பர்களது நட்புரிமையே!

**நாக நாதர் - பெரிய நாயகி**

நாக ராசன், சூரியன் வழி பட்டது. அப்பர் பாடியது. கும்பகோணம் பேருந்துநிலையம் அருகில் உள்ளது.

~~~~~
~~~~~

## 92/தெ.29. குடந்தைக்காரோணம் - (சோமேசர் திருக்கோயில் - கும்பகோணம்)

" - வாழ்க்கோட்டத்
தேரோண மட்டுந் திகழ்குடந்தை மட்டுமன்றிக்
காரோண மட்டுங் கமழ் மலரே" (93)

வாழ்வின் விளக்கம் எனப்படும் தேரோடும் வீதிகள் திகழும் திருக்குடந்தை மட்டுமின்றி திருக்காரோணம் என்னும் திருத்தலம் வரையில் மணக்கின்ற தெய்வமலரே!

**சோமேசர் - சோமசுந்தரி**

அம்மை இறைவன் திருமேனியை ஆரோகணித்த தலமாதலின் காரோணம் (காய - ஆரோகணம் = காரோணம்; காயம் - உடல்) எனப்பெற்றது. பொற்றாமரைக்குளத்தின் கீழ்க்கரையில் உள்ளது.

## 93/தெ.30. திருநாகேஸ்வரம் - 612 204

" - சீரோங்கும்
யோகீச்சுரர் நின்றுவந்து வணங்கு திரு
நாகேச்சுர மோங்கு நற்கனியே" (94)

சீர்மை மிகும் சிவயோகியர்கள் உள்ளத்துவகையுடன் போற்றும் திருநாகேச்சுரம் திருத்தலத்தில் திகழ்கின்ற எமது ஆன்ம நெகிழ்ச்சியே!

**நாக நாதர் - குன்றமா முலையம்மை**

இராகு தலம். சேக்கிழார் நேசித்தது. மூவரும் பாடியது. கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தலம்.



## 94/தெ.31. திருவிடைமருதூர் - 612 104

" - ஓகையுளம்
தேக்கும் வரகுணனாந் தென்னவன்கண் சூழ்பழியைப்
போக்கும் இடைமருதிற் பூரணமே" (95)

உவகைமிகும் உள்ளத்தினைத் தமக்கே உடைமையாக்கிய வரகுண பாண்டியனின் பஞ்சமா பாதகத்தைப் போக்கும் திருவிடைமருதூர் பரிபூரணமே!

**மகாலிங்கேஸ்வரர் - பெருநல முலையம்மை**

நான்கு வீதிகளிலும் நான்கு சிவன் கோயில்கள் இருக்க, இக்கோயில் நடுவிருப்பதால் இது பஞ்சலிங்கத் தலம். இத்தலத்தைச்சுற்றி அமைந்த ஒன்பது திருத்தலங்களை இதன் பரிவாரத் தலங்கள் என்பர். மூவர் தேவாரத்தோடு மாணிக்கவாசகர், கருவூர்த்தேவர், பட்டினத்தார் மகாவித்துவான் பாடியது. மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் உள்ளது.

## 95/தெ.32. தென்குரங்காடுதுறை (ஆடுதுறை-612 101)

" - நீக்கமிலா
நன்(கு) உரங்காணு நடைபோ ரடைகின்ற
தென்குரங் காடுதுறைச் செம்மலே" (96)

இடையீடு இல்லாமல் ஜீவகாருணிய வல்லபத்தை மேலும் மேலும் அடைகின்ற வாழ்வினைப் பெற்றவர் சேர்கின்ற திருத் தென் குரங்காடுதுறை விளங்கும் பெருமையனே!

**ஆபத்சகாயேஸ்வரர் - பவளக்கொடியம்மை**

சுக்ரீவன் வழிபட்டது. சம்பந்தர், அப்பர் பாடியது. மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் உள்ளது.

## 96/தெ.33. திருநீலக்குடி (தென்னலக்குடி) 612 108

" - புன்குரம்பை
ஏலக்குடி புகுந்த எம்மனோர்க்கு உண்மைதரு
நீலக் குடியிலங்கு நிட்களமே" (97)

தத்துவக் குடிலாம் தேகக் குடிசையில் புகுந்து அலைவுபடும் எம்போலியர்க்கு ஜீவ காருணியமே ஆன்ம லாபம் என்று அறிவிக்கும் திருநீலக்குடித் திருப்பதியின் புனிதப் பொருளே!

**நீலகண்டர் - 2 அம்பாள் சந்நிதிகள்**
**அநூபமஸ்தனி (திருமணக்கோலம்)**
**பக்தாபீஷ்டதாயினி (தவக்கோலம்)**

பாற்கடலில் தோன்றிய நஞ்சையுண்டு இறைவர் நீலகண்டராக விளங்கும் தலம். கும்பகோணம் - காரைக்கால் சாலையில் உள்ளது.

~~~~~

## 97/தெ.34. வைகல் மாடக்கோயில் - 612 101

" - ஞாலத்து
நீள்தந்தோர் நாவலர் நினைந்தேத்திடும் வைகல்
மாடக் கோயிற்கண் மதுரமே" (98)

பூமண்டலத்தில் நிலைபேறு அடைவோர் நித்தம் நித்தம் எண்ணி ஏத்துகின்ற வைகல் மாடக் கோயில் திருத்தலத்தின் தெய்வ இனிப்பே!

**வைகல்நாதர் - வைகலாம்பிகை**

இலக்குமி வழிபட்டது. சம்பந்தர் பாடியது. திருநீலக்குடி தாண்டி பழியஞ்சியநல்லூர் கூட்டு ரோட்டில் வலப்புறமாக 2 கி.மீ. சென்று வைகல் அடையலாம்.

53

## 98/தெ.35. திருநல்லம் (கோனேரிராஜபுரம்-612 201)

" - பாடச்சீர்
வல்ல தமிழ்ப்புலவர் மன்னி வணங்கு திரு
நல்லம் மகிழ் இன்ப நவ வடிவே" (99)

தோத்திரம் செய்ய வல்ல தமிழ் அறிஞர்கள் நிலைபெற வணங்கும் திருநல்லம் என்னும் திருவூரில் விளங்கும் இன்பம் தரும் ஒன்பது நிலையே! (பிரமன் முதல் பரநாதம் வரை ஒன்பது நிலையாகும்)

**உமா மகேசுவரர் - அங்க வள நாயகி**

புரூரவ மன்னன் குட்ட நோய் தீர்ந்த பதி. சம்பந்தர், அப்பர் பாடியது. கும்பகோணம் - வடமட்டம் நகரப்பேருந்தில் சென்று கோனேரி ராஜபுரம் கூட்டுரோடில் இறங்கி 1 கி.மீ. செல்லவேண்டும்.

~~~~~

## 99/தெ.36. திருக்கோழம்பம் (திருக்குழம்பியம் - 612 205)

" - இல்லமயல்
ஆழம்பங் கென்ன அறிந்தோர் செறிந்தேத்துங்
கோழம்பம் வாழ் கருணைக் கொண்டலே" (100)

அறியாமையை அளிக்கின்ற மலம் - மாயை - மாமாயை ஆகியவற்றின் ஆதிக்கமும், அதிகாரமும் உணர்ந்து இதனைக் கடக்கும் முறை அறிந்தோர் கூடித் தொழும் திருக்கோழம்பம் வாழ்கின்ற அருள்முகிலே!

**கோழம்பநாதர் - சௌந்தரநாயகி**

இறைவி பசுவடிவங் கொண்டு வழிபட்டது. இறைவர் மேனியில் பசுவின் கால் குளம்பு காணப்படுகிறது. சம்பந்தர், அப்பர் பாடியது. திருநீலக்குடி அடுத்துள்ள எஸ்.புதூர் வந்து திருக்குழம்பியத்திற்குச் செல்ல வேண்டும்.

## 100/தெ.37. திருவாவடுதுறை - 609 803

" - வீழும்பொய்
தீரா வடுவுடை யார் சேர்தற் கருந்தெய்வச்
சீரா வடுதுறையெஞ் செல்வமே" (101)

அழிவுறுகின்றதும் பொய்மையுடையதும் ஆகிய கொலைச் செயலும் புலால் உண்பதும் உடையவர் அடைவதற்கு அரிதாய மேன்மைமிகு திருவாவடுதுறையில் எம் கருணை நிதியமே!

**மாசிலாமணீசுவரர் - ஒப்பிலாமுலையம்மை**

இறைவி பசுவடிவில் வழிபட்ட தலம். சம்பந்தர் பொற்கிழி பெற்ற தலம். திருமூலர் தவம் செய்து 'திருமந்திரம்' என்னும் நூலை அருளியது. திருமூலர், திருமாளிகைத் தேவர் சந்நிதிகள் இருப்பது. மூவர் பாடல் பெற்றது. சைவ ஆதீனம் உள்ள ஊர். மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் உள்ளது.

## 101/தெ.38. திருத்துருத்தி (குத்தாலம் 609 801)

" - பேராக்
கருத்திருத்தி யோத்துங் கருத்தர்க் கருள்செய்
திருக்துருத்தி இன்பப் பெருக்கே" (102)

தெய்வபக்தியில் விலகாமல் உயிர்நேயத்தினால் உய்வு உண்டெனக் கருதும் நல்லுணர்வாளர்க்கருள்புரியும் திருத்துருத்தியின் பேரின்ப வெள்ளமே!

**சொன்னவாறு அறிவார் - அமிர்த முகிழாம்பிகை**

சுந்தரருக்கு ஏற்பட்ட உடற்பிணி இங்கு நீராட நீங்கியது. மூவரும், ஐயடிகள் காடவர் கோனும் பாடியது. இறைவன் இறைவியை வேதம் ஓதி மணங் கொண்ட தலம். மயிலாடுதுறை, கும்பகோணத்திலிருந்து செல்லலாம்.



## 102/தெ.39. திருவழுந்தூர் (தேரழுந்தூர் - 609 808)

"-வருத்துமயல்
நாளு மெழுந்தூர் நவையறுக்கும் அன்பருள்ளம்
நீளு மழுந்தூர் நிறைதடமே" (103)

ஆன்மாவை அறியாமை அலைவுக்கு உட்படுத்தும் மலம், மாயை ஆகிய துன்பத் தொடக்குகளை அறுக்கின்ற அன்பர்களின் உள்ளத்தில் நீங்காதோங்கும் திருஅழுந்தூர் தடாகமே!

**வேதபுரீஸ்வரர் - சௌந்தராம்பிகை**

சம்பந்தர் பாடியது. கம்பர் வாழ்ந்த பதி.

மயிலாடுதுறை, கும்பகோணத்திலிருந்து பேருந்து உண்டு.

## 103/தெ.40. மயிலாடுதுறை - 609 001

" - வேளிமையோர்
வாயூரத் தேமா மலர்சொரிந்து வாழ்த்துகின்ற
மாயூரத் தன்பர் மனோரதமே" (104)

முதன்மை பெறும் வானவர் தலைவர்கள் தேன் சொரியும் கற்பக மாமலர் பொழிந்து போற்றுகின்ற திருமயிலாடுதுறையில் அன்பர்களின் நிறைவே!

**மயூர நாதர் - அபயாம்பிகை**

காசிக்குச் சமமான ஆறுதலங்களுள் இதுவும் ஒன்று. அம்மை மயில் வடிவில் வழிபட்டது. சம்பந்தர், அப்பர் பாடியது. அனைத்து ஊர்களிலிருந்தும் பேருந்து வசதி உண்டு.

## 104/தெ.41. திருவிளநகர் - 609 305

“ - தேயா
வளநகர் என்றெவ்வுலகும் வாழ்த்தும் படுஞ்சீர்
விளநகர் வாழ் எங்கண் விருந்தே” (105)

தெய்வமணம் சூழும் அருள்வளநகர் என்று அனைத்துலகும் போற்றுகின்ற புகழுடைய திருவிளநகர் வாழ்கின்ற எங்களது அருள் விருந்தே!

### துறைகாட்டும் வள்ளல் - வேயுறுதோளி

இறைவனுக்கு மலர்த் தொண்டு செய்த அந்தணனுக்கும் சம்பந்தருக்கும் காவிரியைக் கடக்க, துறை காட்டிய வள்ளல் விளங்கும் தலம். சம்பந்தர் பாடியது. மயிலாடுதுறை - பொறையாறு சாலையில் உள்ளது.

~~~~~

## 105/தெ.42. திருப்பறியலூர் (கீழப் பரசலூர் 609 309)

“ - இளமைச்
செறியலூர் கூந்தல் திருவனை யாராடும்
பறியலூர் வாழ் மெய்ப்பரமே” (106)

இளமைநலம் பொலியும் குழலினைக் கூந்தலாய்த் தாங்கும் இலக்குமி அனையார் களி கொண்டு விளையாடும் திருப்பறியலூர் பரசிவமே!

### வீரட்டேஸ்வரர் - இளங்கொம்பனையாள்

அட்ட வீரட்டங்களுள் தக்கனை அழித்த தலம். சம்பந்தர் பாடியது. மூலவர் சுயம்பு. மயிலாடுதுறை - தரங்கம்பாடி சாலையில் உள்ளே உள்ளது.

~~~~~



## 106/தெ.43. திருச்செம்பொன்பள்ளி (செம்பனார் கோயில் - 609 309)

“ - நெறிகொண்டே
அன்பள்ளி யோங்கும் அறிவுடையார் வாழ்த்துஞ்செம்
பொன்பள்ளி வாழ் ஞான போதமே! (107)

சன்மார்க்க நெறியின் வழி சேவை செய்து அன்பினை அள்ளி அள்ளிப் பருகி ஓங்கும் மெய்யறிவு உடையார் வாழ்த்துகின்ற திருச்செம்பொன்பள்ளி மெய்ஞ்ஞான இன்பமே!

### சொர்ணபுரீஸ்வரர் - மருவார்குழலி

சுயம்புமூர்த்தி. தாட்சாயணிக்கு அருள்புரிந்ததும் வீரபத்திரர் தோன்றியதுமாகிய சிறப்புடையது. சம்பந்தர், அப்பர் பாடியது. மயிலாடுதுறையிலிருந்து நகரப் பேருந்து வசதி உண்டு.

~~~~~

## 107/தெ.44. திருநனிபள்ளி (புஞ்சை 609 304)

“ - இன்புள்ளித்
தெள்ளியார் போற்றித் திகழும் திருநன்னிப்
பள்ளியார்ந் தோங்கும் பரசிவமே” (108)

பேரின்பத்தை அடைய நினைத்து ஜீவகாருணியமே வழி எனத் தேர்ந்து தெளிந்தவர்கள் துதித்து வணங்கும் திருநனிபள்ளி பரம்பொருளே!

### நற்றுணையப்பர் - பர்வதபுத்திரி

சம்பந்தரின் தாய் பகவதியம்மை அவதரித்த பதி. மூவரும் பாடியது. ''புஞ்சை'' என்று வழங்கப்படும். சம்பந்தர் பாலையாக இருந்த இவ்வூரை நெய்தலாகுமாறு பாடினார். இவ்வூருக்கு மயிலாடுதுறையிலிருந்து பேருந்து உண்டு.
~~~~~

## 108/தெ.45. திருவலம்புரம்
## (மேலப் பெரும்பள்ளம் - 609 107)

"- எள்ளுறுநோய்
ஏய வலம்புரத்தை எண்ணாமல் எண்ணுகின்றோர்
மேய வலம்புரத்து மேதகவே" (109)

இழிவுக்கான பிறவிப் பிணிக்கு ஆளாக்கும் உலகியலை நினையாமல் அருளியலை நினைத்து மேம்படுவோர் வாழும் திருவலம்புரத்துப் பெருந்தகையே!

**வலம்புரநாதர் - வடுவகிர்க்கண்ணி**

மூலவர் பிருதிவி லிங்கம். திருமால் வலம்புரிச் சங்கு பெற்ற தலம். மூவர் பாடியது. சீர்காழி - காவிரிப்பூம்பட்டிணம் பேருந்தில் செல்லலாம்.

## 109/தெ.46. திருத்தலைச்சங்காடு - 609 301
## தலைச்செங்காடு

"- தூய கொடி
அங்காடு கோபுரம் வானாற்றாடு கின்றதலைச்
சங்காடு மேவுஞ் சயம்புவே" (110)

உத்தம இடபக் கொடி பறக்கும் கோபுரங்கள் வானளாவி விளங்குகின்ற திருத் தலைச் சங்காட்டில் தானே உருவாய தலைவனே!

**சங்க வனேசுவரர் - சௌந்தர நாயகி**

திருமால் வழிபட்டுப் பாஞ்ச சன்னியம் என்னும் சங்கைப் பெற்ற தலம். சம்பந்தர் பாடியது. ஆக்கூர், திருவலம்புரம் தலங்களுக்கு அருகில் உள்ளது.



## 110/தெ.47. திருஆக்கூர் - 609 301

"- பொங்குமிருட்
கூறு திருவாக்கூர் கொடுப்பனபோற் சூழ்ந்து மதில்
வீறு திருவாக்கூர் விளக்கமே" (111)

பொங்கும் இருள்நிலையை ஒளியாக்கித் தரும் சீரிய மதில்களை இடமாக உடைய திருஆக்கூர் ஓங்கும் அருள்விளக்கமே.

**சுயம்பு நாதர் - வாள் நெடுங்கண்ணி**

தான் தோன்றி மாடம் என்பது கோயிலுக்குப் பெயர். அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டியருளியது. சிறப்புலி நாயனார் அவதரித்த பதி. சம்பந்தர், அப்பர் மற்றும் கபிலதேவர் பாடியது. சீர்காழி, மயிலாடுதுறையிலிருந்து செல்லலாம்.

## 111/தெ.48. திருக்கடவூர் - 609 311

"- மாறகற்றி
நன்கடையூர் பற்பலவும் நன்றி மறவாதேத்துந்
தென்கடையூர் ஆனந்தத் தேறலே" (112)

குறைபாடுகளை நீக்கி ஓங்கும் அறநெறித் திருவூர்கள் பலப்பலவும் செய்நன்றி மறவாது வாழ்த்துகின்ற திருத்தென்கடையூர் பேரானந்தத் தேனே!

**அமிர்தகடேஸ்வரர் - அபிராமிஅம்மை**

அட்ட வீரட்டங்களில் மார்க்கண்டேயருக்காக எமனை வீழ்த்திய திருவூர். மூவர் பாடியது. அபிராமி பட்டர் அருள்பெற்றுப் பாடிய தலம். மயிலாடுதுறை - தரங்கம்பாடி சாலையில் உள்ளது.

## 112/தெ.49. திருக்கடவூர் மயானம் - 609 311.
## (திருமயானம்/திருமெய்ஞ்ஞானம்)

"- வன்மையிலாச்
சொற்கடவி மேலோர் துதித்தல் ஒழியாது ஓங்கும்
நற்கடவூர் வீரட்ட நாயகனே" (113)

அன்பு இல்லாச் சொற்களை நீக்கி ஆன்ம உருக்கமுடையோர் தோத்திரம் செய்தல் விடாது ஓங்கும் திருக்கடவூர் மயானத்தில் விளங்கும் பதியே!

**பிரமபுரீஸ்வரர் - மலர்க்குழல் மின்னம்மை**

சிவபெருமான் பிரமனை நீறாக்கி, மீண்டும் உயிர்ப்பித்து அவருக்குப் படைப்புத் தொழிலை அருளிய தலம். மூவரும் பாடியது. திருக்கடவூருக்குக் கிழக்கில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

## 113/தெ.50. திருவேட்டக்குடி - 609 610

"- வற்கட த்தும்
வாட்டக்குடி சற்றும் வாய்ப்பதே யில்லையெனும்
வேட்டக்குடி மேவு மேலவனே" (114)

பஞ்ச காலத்தும் குடிமக்கள் பட்டினி கிடக்காத வளம்தரும் திருவேட்டக்குடி திருத்தலத்தில் ஓங்கும் முன்னோனே!

**திருமேனி அழகர் - சாந்த நாயகி**

அருச்சுனன் தவத்திற்கு மனமிரங்கி வேடவடிவில் அருள் செய்த தலம். சம்பந்தர் பாடியது. தரங்கம்பாடி - நாகப்பட்டினம் சாலையில் உள்ளே உள்ளது.



## 114/தெ.51. திருத்தெளிச்சேரி
## (காரைக்கால் - கோயில் பத்து) 609 602

"- நாட்டமுற்ற
வாக்குந் தெளிச்சேரி மாதவத்தர்க்கின்பநலம்
ஆக்குந் தெளிச்சேரி யங்கணனே" (115)

விரும்பும்படிப் புனித சொல்லின்பமும் தூய சிந்தனை இன்பமும் உடைய பெருந்தவச்சீலர்களுக்குப் பேரின்ப நலம் தந்தருளும் திருத்தெளிச்சேரி அழகு விழியனே!

**பார்வதீஸ்வரர் - பார்வதியம்மை**

தவம் செய்வதற்கு உகந்த இடம். சம்பந்தர் பாடியது. புத்த நந்தியின் தலையில் இடிவிழச் செய்த தலம். காரைக்கால் அம்மையாருக்குத் தனிக்கோயில். காரைக்கால் நகரின் ஒரு பகுதி.

## 115/தெ.52. தருமபுரம் - 609 602

"- நீக்குந்
கரும புரத்திற் கலவா தருள்செய்
தரும புரஞ்செய் தவமே" (116)

தீவினைக் கட்டுக்களை அவிழ்த்து மீளவும் தீவினை புரியாமல் காத்தரு ள்புரியும் திருத்தருமபுரத் தவச்சீலனே!

**யாழ்முரி நாதர் - தேனமிர்தவல்லி**

மார்க்கண்டேயரின் உயிரைப் பறித்த பிழை நீங்க எமதருமன் வழிபட்ட தலம். சம்பந்தர் யாழ்முறிபதிகம் பாடியது. திருநீலகண்ட யாழ்ப் பாணரின் தாயார் ஊர். திருநள்ளாற்றிலிருந்து காரைக்கால் செல்லும் பாதையில் உள்ளே உள்ளது. புதுவை மாநிலம்.

## 116/தெ.53. திருநள்ளாறு - 609 607

"- இருமையினும்
எள்ளாற்றின் மேவாத ஏற்புடையோர் சூழ்ந்திறைஞ்சு
நள்ளாற்றின் மேவிய என் நற்றுணையே" (117)

இம்மையிலும், மறுமையிலும் துன்மார்க்க நெறியில் நடக்காத காருணிய இயல்புடையோர் சேர்ந்து வணங்கும் திருநள்ளாற்றின் ஓங்கும் என் உயிர்த் துணையே.

### திருநள்ளாற்றீஸ்வரர் - போகமார்த்த பூண்முலையாள்

இறைவர் சுயம்பு. நளன் வழிபட்டுச் சனிதோஷம் நீங்கப் பெற்ற தலம். இங்குச் சனிபகவான் வழிபாடு சிறப்பு. மூவர் பாடியது. சம்பந்தர் மதுரையில் சமணர்களோடு செய்த அனல்வாதத்தில் இவ்வூர்ப் பதிகத்தை அனலில் இட அது எரியாமல் இருந்ததால் -இவ்வூர்ப் பதிகம் பச்சைப் பதிகம் எனப் போற்றப் பெறும். கும்பகோணம், மயிலாடுதுறை, நாகை, காரைக்கால் ஊர்களிலிருந்து செல்லலாம்.

~~~~~

## 117/தெ.54. கோட்டாறு (கொட்டாரம் - 609 703)

"- தெள்ளாற்றின்
நீட்டாறு கொண்டரம்பை நின்று கனிந்தாட்டும்
கோட்டாறு மேவும் குளிர்துறையே" (118)

இறைவன் திருவடி ஞானத்தை நெடிது ஈந்து உவக்கச் செய்யும் பதி. தெய்வ அரம்பையே நின்று, 'அகப்புற அழகு வாய்ந்த நல்லிடம் இது' எனக் காட்டும் திருக்கோட்டாறு பதியின் காருணியநெறியே!

### ஐராவதீஸ்வரர் - வண்டமர்பூங்குழலி

ஐராவதம் (வெள்ளையானை) வழிபட்ட தலம். சம்பந்தர் பாடியது. மயிலாடுதுறை - காரைக்கால், கும்பகோணம் - காரைக்கால் பேருந்துகளில் சென்று கொட்டாரம் கூட்ரோடில் இறங்கி 1 கி.மீ. செல்லவேண்டும்.

63

## 118/தெ.55. திருஅம்பர் (அம்பர், அம்பல்-609 503)

"- கூட்டாக்
கருவம்பர் தம்மைக் கலவாத மேன்மைத்
திருவம்பர் ஞானத் திரட்டே." (119)

நல்வினை செய்யாது தீவினை செய்திடும் பிறவியாளர்களைச் சேர்ந்திடல் செய்யாத மேன்மைத்தலமாம் திருஅம்பரில் விளங்கும் மெய்ஞ்ஞான ஜோதித்திரளே!

### பிரமபுரீஸ்வரர் - பூங்குழலம்மை

சோமாசி மாற நாயனார் வசித்த பதி. சம்பந்தர் பாடியது. அம்பர் மாகாளம் அருகில் உள்ளது.

~~~~~

## 119/தெ.56. அம்பர் மாகாளம்
## (திருமாகாளம், கோயில் திருமாளம் - 609 503)

"- ஒருவந்தர்
மாகாளங் கொள்ள மதனைத் துரத்துகின்ற
மாகாளத் தன்பர் மனோலயமே" (120)

குற்றங்குறைகளை நீக்கிட விரும்பியவர் மேன்மை அடைய, முன்னதாகக் காமக் காழ்ப்பினை நீக்கியருளும் திருமாகாளம் என்னும் தலத்தில் விளங்கும் மெய்யடியாரின் உள்ளத்து ஒருமை உணர்வே!

### மாகாளேஸ்வரர் - பக்ஷயாம்பிகை (ஆதி சக்தி)

அம்பன், அம்பாசுரன் என்னும் அசுரர்களைக் கொன்ற காளி வழபட்ட தலம். சம்பந்தர் பாடியது. மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் பூந்தோட்டத்திலிருந்து உள்ளே செல்லவேண்டும்.

## 120/தெ.57. திருமீயச்சூர்
## 121/தெ.58. இளங்கோயில்

(இவ்விரு கோயில்களும் ஒரே கோயிலுக்குள் உள்ளன)

அ) "- யோகாளக்
காயச்சூர் விட்டுக் கதிசேர வேட்டவர் சூழ்
மீயச்சூர் தண்ணொன்னும் வெண்ணெருப்பே" (121)

அ) ஒருமை உணர்வு மேலோங்க உடலினாய பொறிபுலன் இன்பங்களைப் பற்றற விடுத்து சிவகதி சேர்ந்திட விரும்புவோர் சூழ்கின்ற திருமீயச்சூர் விளங்கும் தண்ணளிய வெண் பிழம்பே!

**முயற்சிநாதர் - சௌந்தர நாயகி**

சூரியன் வழிபட்டது, சம்பந்தர் பாடியது.

ஆ) "-மாயக்
களங்கோயில் நெஞ்சக் கயவர் மருவா
இளங்கோயில் ஞான இனிப்பே" (122)

மாயையும் மலமும் ஒழித்திடாது அலைவு பெறும் மனமுடைய கொலைபாதகர் நெருங்க இயலாத திருஇளங்கோவில் திருத்தலத்தின் மெய்ஞ்ஞான இனிப்பே!

**சகலபுவனேஸ்வரர் - மேகலாம்பிகை**

காளி வழிபட்டது. அப்பர் பாடியது. மயிலாடுதுறை திருவாரூர் சாலையில் பேரளம் உள்வழியில் உள்ளது.



## 122/தெ.59. திலதைப்பதி

(செதலபதி - சிதலைப்பதி - 609 503)

"-வளங்கோவை
நாடுந் திலத நயப்புலவர் நாடோறும்
பாடுந் திலதைப் பதி நிதியே" (123)

களவும், கற்பும் நிறைந்திட அருள்நலம் செய்யும் அருமையைப் போற்றும் கோவை என்னும் சிற்றிலக்கியம் செய்து புலவர்கள் துதிக்க விளங்கும் திருத்திலதைப்பதி அருள்நிதியே!

**முத்தீஸ்வரர் - பொற்கொடி நாயகி**

இராம இலக்குவர்கள் தசரதர்க்கும், சடாயுவுக்கும் திலம் (எள்ளும் நீரும்) தர்ப்பணம் செய்த பதி. திலதர்ப்பணப்பதி - திலதைப்பதி. சம்பந்தர் பாடியது. மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் பூந்தோட்டம் வந்து உள்ளே செல்ல வேண்டும். ஒட்டக்கூத்தர் வழிபட்ட கூத்தனூர் சரஸ்வதி கோயில் வழியில் உள்ளது.

## 123/தெ.60. திருப்பாம்புரம் - 612 203

" - ஆடுமயில்
காம்புரங்கொள் தோளியர் பொற்காவிற் பயில்கின்ற
பாம்புரங்கொள் உண்மைப் பரம்பொருளே" (124)

தோகை விரித்தாடும் மயில்கள் பயிலும் சோலையில் ஆடும் மங்கையர் சூழ் திருப்பாம்புரம் என்னும் தெய்வப்பதியின் மேலவனே!

**பாம்பீசர் - வண்டார் குழலி**

ஆதிசேடன் வழிபட்டது. நாகதோஷம் நீங்க, மகப்பேறு வாய்க்க, ராகு கேது தோஷம் நீங்க பிரார்த்தனை செய்யப்படும் பதி. சம்பந்தர் பாடியது. திருமீயச்சூருக்குப் பக்கத்தில் உள்ளது.

## 124/தெ.61. சிறுகுடி - 609 503

"-ஆம்புவனம்
துன்னும் பெருங்குடிகள் சூழ்ந்து வலஞ்செய்து வகை
மன்னும் சிறுகுடி ஆன்மார்த்தமே" (125)

உலக போக போக்கியங்களை அனுபவிக்கும் நற்குடிகள் வலஞ்செய்து வழிபட விளங்கும் திருசிறுகுடியில் விளங்கும் ஆன்மஒளியே!

**மங்கள நாதர் - மங்கள நாயகி**

இறைவி மணலால் சிவலிங்கம் செய்து வழிபட்ட தலம். செவ்வாய் தோஷம் நீங்கும் இடம் (பிற சமயத்தினரும் வந்து வழிபடுகின்றனர்). சம்பந்தர் பாடியது. மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் பூந்தோட்டம் வந்து செல்ல வேண்டும்.

## 125/தெ.62. திருவீழிமிழலை - 609 505

" - முன்அரசும்
காழி மிழலையாருங் கண்டு தொழக் காசளித்த
வீழி மிழலை விராட் டுருவே" (126)

திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் தங்கியிருந்த போது நிலவிய பெரும் பஞ்சத்தினைப் போக்கிட, சிறந்த அன்னதானம் செய்திடப் பொற்காசு (படிக்காசு) அளித்த திருவீழிமிழலையின் அகிலடாண்ட முதல்வனே!

**விழியழகர் - அழகு முலையம்மை**

திருமால் ஆயிரம் தாமரை மலர்களால் வழிபட்டபோது ஒரு மலர் குறைந்ததால், தாமரை போன்ற தன் கண்ணைப் பெயர்த்து மலராக இட்டு வழிபட, அப்போது சிவன் திருமாலுக்குச் சக்கரம் அருளிய பதி. திருமணக் கோலச் சிறப்பு. திருவாரூர், கும்பகோணம் ஊர்களிலிருந்து செல்லலாம்.



## 126/தெ.63. வன்னியூர் (அன்னியூர்/அன்னூர் - 612 201)

" - ஊழி தொறும்
மன்னியூர் மால்விடையாய் வானவாவென்று தொழ
வன்னியூர் வாழு மணிகண்டா"(127)

யுகம் யுகமாக நிலைபெற்ற ஜீவகாருண்யமாம் வெள்எருதின் மீது ஊர்ந்த இறைவனே! வானவர் தலைவனே! என்று அன்பர்கள் வணங்கிப் புகழும் திருவன்னியூர் நீலகண்டனே!

**அக்னீஸ்வரர் - கௌரி**

அக்னி வழிபட்டது. அப்பர் பாடியது. திருமண மாகாதவர்கள் வந்து வழிபடின் திருமணமாகும். கும்பகோணத்திலிருந்து அன்னியூருக்கு நகரப்பேருந்து உள்ளது.

## 127/தெ.64. திருக்கருவிலிக் கொட்டிட்டை (கருவேலி 605 501)

" - இந்நிமிடம்
சிந்துங் கருவலியின் திண்மை யென்று தேர்ந்தவர்கள்
முந்துங் கருவிலி வாழ் முக்கண்ணா" (128)

இந்த நிமிடத்திலேயும் ஊழ்வினையின் ஆதிக்கம் அழியும் என்று தெளிந்தவர்கள் வணங்கும் திருக்கருவிலி என்னும் தலத்தில் வாழும் முக்கண்ணனே!

**சற்குண நாதேஸ்வரர் - சர்வாங்க நாயகி**

உருத்திர கணத்தர் வழிபட்டது. அப்பர் பாடியது. கோனேரி ராஜபுரம் அருகில் உள்ளது.

## 128/தெ.65. பேணு பெருந்துறை
## திருப்பந்துறை - 612 602

" - மந்தணத்தைக்
காணு மருந்துறையிற் காமர் தலமென்றெவரும்
பேணு பெருந்துறையிற் பெம்மானே!" (129)

அகஒளியை ஈன்ற தெய்வ மருந்துறைகின்றது இந்த அழகிய தலமே என்று யாவரும் போற்றுகின்ற திருப்பேணு பெருந்துறையின் பெருமானே!

**சிவானந்தேஸ்வரர் - மலையரசி**

பிரமன், உமை, முருகன் வழிபட்டது. சம்பந்தர் பாடியது. கும்பகோணம் - காரைக்கால் பாதையில் எரவாஞ்சேரி இறங்கிச் செல்ல வேண்டும்.

## 129/தெ.66. திருநறையூர்ச் சித்தீச்சரம்
## திருநறையூர் - 612 102

" -ஏறுபன்கா
ஈட்டும் பெருநறையா றென்ன வயலோடி
நாட்டும் பெருநறையூர் நம்பனே" (130)

அருள் வலிமையால் பெருக்கெடுக்கும் தேனாறு வயல் எல்லாம் பாய்கின்ற திருப்பெருநறையூர் நம்பிரானே!

**சித்த நாதர் - அழகம்மை**

பிரமன், குபேரன், மார்க்கண்டேயர் வழிபட்டது. சம்பந்தர், சுந்தரர் பாடியது. கும்பகோணம்-நாச்சியார் கோவில் பேருந்தில் செல்லலாம்.



## 130/தெ.67. அரிசிற் கரைப் புத்தூர்
## (அளகாபுத்தூர் / அழகார்புத்தூர் - 612 401)

" - காட்டும்
பரிசிற் கரைப் புற்றோர் பாங்குபெற வோங்கும்
அரிசிற் கரைப் புத்தூரானே" (131)

ஆன்மநிலையை மறைத்துக் காட்டும் தத்துவத் தன்மைகளை விலக்கிச் சிற்சாகரத்து ஓங்கும் சீலர்கள் வாழும் திரு அரிசிற்கரைப்புத்தூர் வாழும் தெய்வமே!

**படிக்காசளித்த நாதர் - அழகாம்பிகை**

திருக்கோவில் சிவாசாரியாராகிய புகழ்த்துணை நாயனார் வறுமையிலும் வழிபாடு செய்து சோர்ந்த போது படிக்காசு அளித்த தலம். மூவர் பாடியது. திருநறையூருக்கு முன்னாலேயே உள்ளது.

## 131/தெ.68. சிவபுரம் - 612 401

" - தரிசனத்தேக்
காலுஞ் சிவபுரத்தைக் காதலித்தோர் தங்கள்துதி
ஏலுஞ் சிவபுரத்தி லெம்மானே"(132)

எப்போதும் தரிசிக்க சிவபுரத்தை விரும்புவோரின் தோத்திர மாலையை ஏற்றருளும் திருச்சிவபுரத்தின் எமது தலைவனே!

**சிவகுரு நாதர் - சிங்காரவல்லி**

திருமால் வெள்ளைப்பன்றி வடிவில் பூசித்த தலம். சம்பந்தர், அப்பர் பாடியது. கும்பகோணம் - திருவாரூர் நெடுஞ்சாலையில் சாக்கோட்டையில் பிரியும், சிவபுரி கிளைப்பாதையில் 2 கி.மீ. சென்று இவ்வூர் அடையலாம்.

## 132/தெ.69. திருக்கலயநல்லூர்
## (சாக்கோட்டை - 612 401)

" - மாலுங்கொள்
வெப்புங் கலைய நல்லோர் மென்மதுரச் சொன்மாலை
செப்புங் கலய நல்லூர்ச் சின்மயனே'' (133)

காம வெகுளி மயக்கங்களும் மற்றுமுள்ள மலமாயைகளும் தொலைந்து அகல அன்பர்கள் இனிய தமிழ்ப் பதிகம் ஓதி மகிழும் திருக்கலயநல்லூர் ஞான பரிபூரணமே.

**அமிர்த கலச நாதர் - அமிர்தவல்லி**

ஊழிக் காலத்தில் உயிர்களை அடக்கிய கலயம் தங்கிய பதி. சுந்தரர் பாடியது. கும்பகோணத்திலிருந்து 5 கி.மீ.

## 133/தெ.70. திருக்கருக்குடி
## (மருதாந்தநல்லூர் - 612 402)

" - செப்பமுடன்
ஓங்குந் திருத்தொண்டர் உள்குளிர நல்லருளால்
தாங்குங் கருக்குடி வாழ் சங்கரனே'' (134)

முறையுடன் வளரும் திருத் தொண்டர்களை உள்ளம் குளிர சீரருளால் தாங்குகின்ற திருக்கருக்குடி வாழ்கின்ற மங்களகரமானவனே!

**கருக்குடிநாதர் - சர்வ அலங்கார நாயகி**

சம்பந்தர் பாடியது. ஏனாதி நாயனார் அவதரித்த எயினனூர் இத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ளது. கும்பகோணம் - மன்னார்குடி சாலையில் உள்ளது.



## 134/தெ.71. திருவாஞ்சியம் - 610 110

" - ஆங்ககனந்
தாஞ்சியத்தை வேங்கைத் தலையால் தடுக்கின்ற
வாஞ்சியத்தின் மேவு மறையோனே'' (135)

விண்ணளாவத் தாவும் சிங்கமதை வேங்கைமரம் தம் வளர்ச்சியால் தடுக்கின்ற இயற்கை வளமுடைய திருவாஞ்சிய வேதார்த்தனே!

**வாஞ்சி நாதன் - வாழவந்த நாயகி**

இறைவன் சுயம்பு. காசிக்கு இணையானது . எமன் வழிபட்டது. மூவர் பாடியது. கும்பகோணம் - நன்னிலம் வழியில் அச்சுத மங்கலத்தில இறங்கித் திருவாரூர் பாதையில் 1கி.மீ. செல்லவேண்டும்.

## 135/தெ.72. நன்னிலம் - 610 105

" - ஆஞ்சியிலா
திந்நிலத்தும் வானாதி யெந்நிலத்து மோங்குபெரு
நன்னிலத்து வாழ் ஞான நாடகனே (136)

அசைக்க முடியாத மண்ணுலகிடத்தும் விண்ணுலகம் முதலான எவ்வுலகத்தும் ஓங்கும் கீர்த்தி உடைய திருநன்னிலம் என்கின்ற திருத்தலத்தில் வாழ்கின்ற மெய்ஞானக் கூத்தனே.

**பிரகாச நாதர் - தேவ காந்தார நாயகி**

சூரியன், அகத்தியர் வழிபட்டது. சுந்தரர் பாடியது. மயிலாடுதுறை - திருவாரூர் வழியில் உள்ளது.

## 136/தெ.73. (திருக்) கொண்டீச்சரம்
## (திருக்கண்டீஸ்வரம் - 609 504)

“ – மன்னுமலர்
வண்டீச் சுரம்பாடி வார்மது வுண்டுள் களிக்குங்
கொண்டீச் சுரத்தமர்ந்த கோமானே” (137)

எப்போதும் பூக்கள் மலர அதனுள் இருக்கும் தேனைப் பாசுரம் பாடித் தேனீக்கள் உண்ணும் திருவுடைய திருக் கொண்டீச்சுரத்துத் தெய்வச்சீமானே!

**பசுபதீஸ்வரர் - சாந்த நாயகி**

காமதேனு வழிபட்டது. உமை பசு வடிவில் இறைவனைத் தேடிக் கண்ட தலம். அப்பர் பாடியது. நன்னிலத்திற்கு முன் உள்ள தூத்துக்குடி. நிறுத்தத்தில் இறங்கிச் செல்லவேண்டும்.

## 137/தெ.74. திருப்பனையூர் - 609 504

“ – கண்டசு
நண்பனை யூரன் புகழ் நம்பனென உம்பர்தொழத்
தண்பனையூர் மேவுஞ் சடாதரனே. (138)

தான் போற்றும் மேதகு நண்பனாக ஏற்றுக்கொண்ட திருஆரூர் சுந்தரர் வாழ்த்துகின்ற நம்பனே! எனத் தேவர்கள் தொழும் திருப்பனையூர் பதியின் செஞ்சடையாளனே!

**அழகிய நாதர் - பெரிய நாயகி**

கரிகாற்சோழன் வளர்ந்து வழிபட்டது. சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் பாடியது. பேரளம் - திருவாரூர் சாலையில் பனையூர் இறங்கி 1.கி.மீ. செல்ல வேண்டும்.



## 138/தெ.75. திருவிற்குடி - 610 101

“ – பண்புடனே
எற்குடி யானங் கொண்டிருக்க மகிழ்ந்தளித்த
விற்குடியின் வீரட்ட மேயவனே. (139)

நற்பண்புகளுடன் குடிமக்கள் விளங்கி ஓங்கும்படி அருள் செய்தருளும் திருவிற்குடி என்னும் வீரட்ட தலத்தில் விளங்குபவனே.

**வீரட்டானேஸ்வரர் - ஏலவார்குழலி**

அட்ட வீரட்டங்களுள் சலந்தரனைச் சங்காரம் செய்த தலம். சம்பந்தர் பாடியது. மூலவர் சுயம்பு மூர்த்தி. காரைக்கால்-திருவாரூர் பேருந்தில் விற்குடி கூட்டு ரோடில் இறங்கி 1.கி.மீ. செல்லவேண்டும்.

## 139/தெ.76. திருப்புகலூர் - 609 704

“ – சொற்கோடிய
வன்புகலா நெஞ்சின் மருவும் ஒரு தகைமைத்
தென் புகலூர் வாழ் மகா தேவனே” (140)

கொடுஞ் சொற்களை ஒரு பொழுதும் பேசி அறியாத உள்ளத்தில் குடி கொள்ளும் பெருந்தகைமை உடைய திருத் தென் புகலூர் மகாதேவனே !

**கோணப்பிரான் - கருந்தார்குழலி**

அப்பர் முத்தி பெற்றது. முருக நாயனார் அவதாரத் தலம். மூவர் பாடியது. சுந்தரர்க்கு இறைவன் செங்கற்களைப் பொன்னாக மாற்றியருளிய தலம்.

## 140/தெ.77. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்

(திருப்புகலூர் கோவிலுக்குள் மூலவருக்கு வலப்பால் உள்ள சிவலிங்கம்)

" - இன்பமறை
அர்த்தமா நீக்கரிய வாதாரமாகி நின்ற
வர்த்தமா நேச்சரத்து வாய்ந்தவனே" (141)

மறுமை இன்பம் பெறுவதற்கான வேதப் பொருளாகி எங்கும் நிறைந்தொளிரும் திருவர்த்தமாநேச்சரம் ஓங்கி நின்றவனே!

**வர்த்தமானலிங்கம் - மனோன்மணி**

சம்பந்தர் பாடியது. நன்னிலம் நாகப்பட்டினம் வழியில் உள்ளது.

## 141/தெ.78. இராமனதீச்சரம்
## (திருக்கண்ணபுரம் - 609 704)

" - மித்தையுற்ற
காமனதீசங் கெடவே கண்பார்த்தருள் செய்த
ராமனதீசம் பெறுதி ராமயனே" (142)

நம்முள் எழும் காமவேளின் ஆதிக்கம் கெடத் திருவருட் கண்பார்த்தருள்கின்ற திருராமனதீசம் என்னும் திருத்தலத்தில் விளங்கும் மாயாதீதனே!

**இராமனதீஸ்வரர் - சரிவார் குழலி**

இராமன், இராவணனைக் கொன்ற பாவம் நீங்க வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. நன்னிலம், திருப்புகலூரிலிருந்து செல்லலாம்.



## 142/தெ.79. திருப்பயற்றூர்
## (திருப்பயத்தங்குடி - 609 701)

" -தோமுண்
மயற்றூர் பறித்த மனத்தில் விளைந்த
பயற்றூர் திசையம் பரனே" (143)

தீமைதரும் மாயையின் ஆணிவேரைப் பறித்திடும் வல்லபமுடைய திருப்பயற்றூர் எண்திசையானவனே!

**திருப்பயற்று நாதர் - காவியங்கண்ணி**

அப்பர் பாடல் பெற்றது. திருமருகலுக்கு அருகில் உள்ளது.

## 143/தெ.80. திருச்செங்காட்டாங்குடி - 609 704

" - இயற்றுஞ்சீர்
ஆச்சிர மேவுஞ் செங்காட்டங் குடியினங் கணப
தீச்சரம் வாழும் சந்திரசேகரனே. (144)

புகழ் நிலவும் இல்லற வாழ்வியல் உடையோர் வாழும் திருச்செங்காட்டாங்குடி கணபதீச்சரம் சந்திர சூடாமணியே!

**உத்தராபதீஸ்வரர் - குழலம்மை**

கபாலி வடிவில் வந்த இறைவன் சிறுத்தொண்ட நாயனாரிடம் பிள்ளைக்கறி அமுது கேட்ட பதி. சிறுத்தொண்டர் முதலியோருக்கு அருள்புரிந்த தலம். சம்பந்தர், அப்பர் பாடியது. திருவாரூர் - திருமருகல் சாலையில் உள்ளே உள்ளது.

## 144/தெ.81. திருமருகல் - 609 702

" - ஏச்சகல
விண்மருவி னோனை விட(ம்) நீக்க நல்லருள்செய்
வண்மருகல் மாணிக்க வண்ணனே" (145)

பழிநீங்கப் பாம்பு தீண்டி இறந்தவனைச் செட்டிப் பெண்ணுக்காக விடம்நீக்கி உயிர்ப்பித்து அருளிய திருமருகல் என்னும் திருத்தல மாணிக்க ஒளியே!

**மாணிக்கவண்ணர் - வண்டுவார்குழலி**

பாம்பு கடித்து இறந்த செட்டிமகனைச் சம்பந்தர் "சடையாய் எனுமால்" என்னும் பதிகம் பாடி உயிர்ப்பித்த பதி. சம்பந்தர், அப்பர் பாடியது. மூலவர் சுயம்பு. திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஊர்களிலிருந்து செல்லலாம்.

~~~~~

## 145/தெ.82. திருச்சாத்த மங்கை
## (சீயாத்தமங்கை - 609 702)

" - திண்மை கொண்ட
மாத்தமங்கை உள்ளம் மருவிப் பிரியாத
சாத்த மங்கைக் கங்கைச் சடைமுடியோய்" (146)

அருள்வலிமை கொண்ட உமையம்மையின் உள்ள பீடத்திலிருந்து பிரிய எண்ணா திருச்சாத்தமங்கை விளங்கும் செஞ்சடையாளனே.

**அயவந்தீஸ்வரர் - இருமலர்க்கண்ணம்மை**

அயன் (பிரமன்) வந்தித்த (வழிபட்ட) தலம். திருநீலநக்க நாயனாரின் அவதாரப் பதி. சம்பந்தர் பாடியது. திருமருகலிலிருந்து நாகூர் செல்லும் சாலையில் சென்று அடைய வேண்டும்.

77

## 146/தெ.83. திருநாகைக்காரோணம்
## (நாகப்பட்டினம் - 611 001)

" - தூத்தகைய
பாகைக் காரென்னும் பணிமொழியார் வாழ்த்தோவா
நாகைக் காரோணம் நயந்தோனே" (147)

வடித்தெடுத்துக் காய்ச்சிய வெல்லப் பாகினும் விரும்புமொழி பேசும் மகளிரின் வாழ்த்தொலி நீங்காத திருநாகைக்காரோணம் உடையானே.

**காயாரோகணேஸ்வரர் - நீலாயதாட்சி**

புண்டரீக முனிவரை இறைவன் தன்மேனியில் (காயத்தில்) ஆரோகணம் செய்து கொண்டது காயாரோகணம். அதிபத்த நாயனார் அவதரித்தது. சப்த விடங்கத் தலம். மூவர் பாடியது. தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை முதலிய ஊர்களிலிருந்து செல்லலாம்.

~~~~~

## 147/தெ.84. சிக்கல் - 611 108

" - ஓகையற
விக்கல் வருங்கால் விடாய்தீர்த் துலகிடை நீ
சிக்கலெனுஞ் சிக்கல் திறலோனே" (148)

வாழ்வு அழிக்கும் விக்குள் வருங்காலத்தில் உலகியல் ஈடுபா டில் அழுந்தாதீர் என்று அல்லல் தீர்த்தருளும் திருச்சிக்கல் வாழ்பவனே!

**வெண்ணெய்ப்பிரான் - வேல்நெடுங்கண்ணி**

வசிட்டர் காமதேனுவின் வெண்ணெய்யினால் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட பதி. சிங்காரவேலர் சந்நிதி சிறப்பு பெற்றது. கந்தர்சஷ்டி வேல் வாங்கும் விழா சிறப்பு. சம்பந்தர் பாடியது. திருவாரூர் நாகப்பட்டினம் சாலையில் அமைந்துள்ளது.

## 148/தெ.85. கீழ்வேளூர் (கீவளூர்) 611 104

" - மிக்கமினார்
வாளூர் தடங்கண் வயல்காட்டி யோங்குங்கீழ்
வேளூரில் செங்கண் விடையோனே!" (149)

மிகவும் கவர்ச்சியுடைய வாள்போல் கூரியதும் அகன்றதுமான விழிகளின் அழகினை மகளிர் காட்டிடும். திருக்கீழ்வேளூர் விளங்கும் சிவந்த கண்களையுடைய இடப வாகனனே!

**கேடிலியப்பர் - வனமுலை நாயகி**

மூலவர் சுயம்பு. அகத்தியருக்கு வலதுபாதம் தரிசனம் அளித்த பதி. சம்பந்தர், அப்பர் பாடியது. திருவாரூர் - நாகப்பட்டினம் சாலையில் உள்ளது.

## 149/தெ.86. தேவூர் - 611 109

"- நீணவைப்
பாவு ரிசையிற் பயன்சுவையிற் பாங்குடைய
தேவூர் வளர் தேவ தேவனே!" (150)

அகமகிழ்ச்சி கொண்டு இசைக்கும் துதிப்பாடலின் இனிய சுவையினும் சீர்மையுடைய திருத்தேவூர் என்னும் திருப்பதியின் மகாதேவனே!

**தேவகுரு நாதர் - தேன்மொழியம்மை**

கௌதமர், வியாழன், இந்திரன், குபேரன், சூரியன் வழிபட்டது. விராட மன்னன் தன் மகள் உத்தரையுடன் வழிபட்டது. சம்பந்தர் பாடியது. திருவாரூர் - வலிவலம் பேருந்தில் ஏறித் தேவூர் இறங்கிச் செல்ல வேண்டும்.



## 150/தெ.87. திருப்பள்ளியின் முக்கூடல் (610 002)
## (திருப்பள்ளி முக்கூடல் / குருவி இராமேஸ்வரம்)

" - பூவினிடை
இக்கூடன் மைந்த இனிக்கூடல் என்று பள்ளி
முக்கூடல் மேவியமர் முன்னவனே!" (151)

"தாமரையில் அமர்ந்த நான்முகனே! இனியும் பொருந்தல் உணர்வு கொண்டு இறைவனைத் தேட ஆர்வ முறாதே" என்று அறிவுறுத்தும் திருப்பள்ளி முக்கூடல் முன்னோனே.

**முக்கூடல் நாதர் - மைமேவு கண்ணி**

ஜடாயுவிற்காக விசேஷ பலனைத் தரக்கூடிய முக்கூடல் தீர்த்தத்தை உண்டாக்கி அருள் செய்த தலம். அதனால் குருவி (ஜடாயு) இராமேஸ்வரம் எனப்படுகிறது. அப்பர் பாடியது. திருவாரூர் கடைத்தெரு வழியாக வழிகேட்டுச் செல்லவேண்டும்.

## 151/தெ.88. திருவாரூர் - 610 001

" - தக்கநெடுந்
தேரூரணி வீதிச் சீரூர் மணிமாட
ஆரூரில் எங்கள் அருமருந்தே" (152)

ஆரூர்க்கு அழகு ஆழித்தேர் செல்லும் திருவீதிகள். அவ்வீதிகளில் ஓங்கிய தெய்வ மணி மாடங்கள் நிறைந்தொளிரும் அத்திருஆரூரில் விளங்கும் அற்புத மருந்தே.

**புற்றிடங் கொண்டார், தியாகராயர்**
**அல்லியங்கோதை, கமலாம்பிகை**

சப்த விடங்கத் தலம். சுந்தரர் பரவையாரோடு வாழ்ந்த தலம். திருத்தொண்டத் தொகையால் அடியார்களைப் போற்றிய தலம். தண்டியடிகள், கழற்சிங்கர், செருத் துணையார், விறன்மிண்டர், நமிநந்தியடிகள் தொண்டு செய்த பதி. மூவர் பாடல் பெற்றது.

## 152/தெ.89. திருஆரூர் அரநெறி

### (திருவாரூர் தியாகராசர் திருக்கோயிலுக்குள் உள்ளது)

" - நீரூர்ந்த
காரூர் பொழிலுங் கனியீந் திளைப் பகற்றும்
ஆரூ ரரனெறி வேளாண்மையே!" (153)

முகில் கூட்டங்கள் சூழும் சோலைகளும் முக்கனிகள் வழங்கிப் பசியாற்றும் தயாமூலதந்மத்தை மேற்கொள்ளும் திருவாரூர் அரநெறியின் கருணை நன் முயற்சியே.

**அகிலேஸ்வரர் - வண்டார்குழலி**

நமி நந்தியடிகள் தண்ணீரால் விளக்கெரித்து வழிபட்டது. அப்பர் பாடியது.

## 153/தெ.90. திருவாரூர் பரவையுண் மண்டளி

" - ஏரார்ந்த
மண்மண்டலிநர் மருவுமாரூர்ப் பரவை
உண்மண்டலி எம் உடைமையே" (154)

எழில் நிறைந்த புவியரசர்கள் சூழும் திருஆரூர் பரவை உண்மண்டலி என்னும் தெய்வப்பதியின் எம் அருட்செல்வமே

**தூவாய் நாதர்**

வருணன் அனுப்பிய கடலைச் சுவறச் செய்த தலம் (பரவை - கடல்) துர்வாச முனிவர் பூசித்தது. சுந்தரர் பாடியது. திருவாரூர் தேர்நிலைக்கு அருகில் உள்ளது.



## 154/தெ.91. திருவிளமர் (விளமல் - 610 002)

" - திண்மைக்
களமர் மகிழக் கடைசியர் பாடும்
விளமர் கொளுமெம் விருப்பே" (155)

வேளாண்மை வலிவுபெற்ற உழவர்கள் மகிழ்ந்திட உழத்தியர்கள் பாடும் உழவுப்பாடல்கள் ஒலி சூழும் திருவிளமர் என்னும் திருப்பதியின் எமது நல்லிச்சையே!

**பதஞ்சலி மனோகரர் - மதுர பாஷிணி**

பதஞ்சலி முனிவர் வழிபட்டது. சம்பந்தர் பாடியது. திருவாரூர் - தஞ்சை சாலையில் திருவாரூரை அடுத்து உள்ளது.

## 155/தெ.92. திருகரவீரம் (கரையபுரம் - 610 104)

" - வளமை
எருக்கர வீரஞ்சேர் எழில் வேணி கொண்டு
திருக்கர வீரஞ்சேர் சிறப்பே" (156)

(கரவீரம் - பொன்அலரிசெடி) நிராசையைச் சுட்டும் எருக்கமலரும் அதன் வழி அகிம்சை அற மலர்ச்சியை உணர்த்தும் அலரிப்பூவும், அழகு செஞ்சடையில் அணிந்து திருக்கரவீரம் என்னும் திருத்தலத்தில் விளங்கும் அருட்சிறப்பே.

**கரவீரேஸ்வரர் - பிரத்தியட்ச மின்னம்மை**

கௌதம முனிவர் பூசித்தது. சம்பந்தர் பாடியது. திருவாரூர் - கும்பகோணம் சாலையில் உள்ளது.

### 156/தெ.93. பெருவேளூர் (மணக்கால் ஐயம்பேட்டை) - 610 104

"- உருக்க
வருவேளூர் மாவெல்லா மாவேறுஞ் சோலைப்
பெருவேளூர் இன்பப் பெருக்கே" (157)

உள்ளம் உருக்கும் வடிவுடைய காமவேளின் அழகு நிறை சோலைகளை உடைய திருப்பெருவேளூரின் பேரின்பப் பெருக்கமே!

**பிரியா ஈஸ்வரர் - ஏலவார் குழலி**

மூலவர் சுயம்புமூர்த்தி. திருமால் தாம் எடுத்த மோகினி வடிவிற்கான காரியம் முடிந்த பின்பு ஆண் வடிவு வேண்டிப் பெற்ற பதி. சம்பந்தர், அப்பர் பாடியது. கும்பகோணம் - குடவாசல் திருவாரூர் சாலையில் மணக்காலை அடுத்து உள்ளே உள்ளது.

### 157/தெ.94. திருத்தலையாலங்காடு - 612 603

"- கருமை
மிலையாலங் காட்டு மிடற்றாய் என்றேத்தும்
தலையாலங் காட்டுத் தகவே. (158)

கரிய நிறம் பொருந்திய ஆலகாலவிஷம் அருந்தியதைக் காட்டும் அருள் கழுத்துடையானே எனப்புகழும் திருத்தலையாலங்காட்டுத் திருப்பதியின் மேதகு குணமுடையோனே.

**ஆடவல்ல நாதர் - உமாதேவி**

முயலகனை அடக்கி அவன் முதுகை நெறித்து நடனமாடிய தலம். கபிலர் வழிபட்டது. அப்பர் பாடியது. பண்டைய தலையானங்கானம் எனப்படுவதும் இவ்வூரே. திருவாரூர் - கும்பகோணம் சாலையில் சென்று அடையலாம்.



### 158/தெ.95. குடவாயில் (குடவாசல் - 612 601)

" - நிலைகொள்
தடவாயில் வெண்மணிகள் சங்கங்கள் ஈனும்
குடவாயில் அன்பர் குறிப்பே. (159)

சிறப்புடைய நீர்த்தடங்களிலெல்லாம் சங்குகள் வெண்மணிகளை ஈன்றுவக்கும் திருக்குடவாயில் அருட்குறிப்பே!

**கோணேசுவரர் - பெரியநாயகி**

உலகப் பிரளய காலத்தில் இறைவன் உயிர்கள் அனைத்தையும் அமிர்தகுடம் ஒன்றிலிட்டு அக்குடத்தின் வாயிலில் சிவலிங்கமாக இருந்து காத்தார். லிங்கத்தின் மீது புற்று மூடியது. அதனைக் கருடன் தன் மூக்கினால் பிளந்து வெளிப்படுத்திய பதி. கும்பகோணம், திருவாரூர், மயிலாடுதுறை இடங்களிலிருந்து செல்லலாம்.

### 159/தெ.96. திருச்சேறை - 612 605

" - மடவாட்கோர்
கூறை உவந்தளித்த கோவே யென்றன்பர்தொழச்
சேறை உவந்திருந்த சிற்பரமே" (160)

"உமையம்மைக்கு ஒருபாகத்தை உவந்தளித்த அருளரசே" என்று மெய்யன்பர்கள் வணங்கத் திருச்சேறை திருத்தலத்தில் வீற்றிருந்த ஞான வடிவே.

**செந்நெறியப்பர் - ஞானவல்லி**

மார்க்கண்டேயர், தௌமிய முனிவர் வழிபட்டது. சம்பந்தர், அப்பர் பாடியது. இதுஒரு வைணவப் பதியுமாகும். கும்பகோணத்தி லிருந்து பேருந்து செல்கிறது.

## 160/தெ.97. திருநாலூர், திருநாலூர் மயானம் 612 605

" - வேறுபடாப்
பாலூர் நிலவிற் பணிலங்கள் தண்கதிர் செய்
நாலூரில் அன்பர் பெறு நன்னயமே" (161)

மாறுபடுதலில்லாத வெண்ணிலவின் ஒளி அழகூட்ட சங்குகள் குளிர்ந்த கிரணங்களைப் பரப்பி ஊர்ந்திடும் திருநாலூரில் அன்பர்கள் பெறும் நல்லிரக்க உணர்வே.

நாலூர் - வைப்புத்தலம். இது பேருந்துச் சாலையில் உள்ளது. மாடக்கோயில்.

**பலாசவனநாதர் (சுயம்புமூர்த்தி) பெரியநாயகி**

சம்பந்தர் பாடல் பெற்ற தலம் நாலூர் மயானம்.

**ஞானபரமேஸ்வரர் - ஞானாம்பிகை**

நாலூர் மயானம் 1. கி.மீ. உள்ளே உள்ளது. கச்சி, கடவூர், காழி மயானம் போல் திருநாலூரும் ஒன்று. திருச்சேறையை அடுத்து நாலூர் உள்ளது. (சதுர்வேதிமங்கலம் - நாலூர்; சதுர் = நான்கு)

~~~~~

## 161/தெ.98. திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் (ஆண்டார்கோயில்) 612 804

" - மேலூரும்
நோய்க்கரையுட் செய்யாத நோன்மையோர் சூழ்ந்த கடு
வாய்க்கரையுள் மேவுகின்ற வண்மையே" (162)

மேல்வரும் பிறவிகள் துன்பம் தராதபடிக் கொல்லா நோன்பினால் காத்திடுவோர் நிறைந்த திருக்கடுவாய்க்கரை அருட்கொடையே.

**சொர்ணபுரீஸ்வரர் - சொர்ணாம்பிகை**

காசிப முனிவர் வழிபட்டது. அப்பர் பாடியது. குடவாசல் - வலங்கைமான் சாலையில் உள்ளது.

85

## 162/தெ.99. திருஇரும்பூளை (ஆலங்குடி 612 801)

" - வாய்த்த
பெரும்பூகந் தெங்கிற் பிறங்க வளம் கொள்ளும்
இரும்பூளை மேவி யிருந்தோய்" (163)

வளர்ந்த கமுக மரங்கள் தென்னை மரங்களை விடச் செழித்தோங்கும் நீர்வளம் கொண்ட திருஇரும்பூளையில் பொருந்த இருந்தவனே!

**ஆபத் சகாயேஸ்வரர் - ஏலவார் குழலி**

தட்சிணாமூர்த்திக்குச் சிறப்புத்தலம். விசுவாமித்திரர் வழிபட்டது. சம்பந்தர் பாடியது. இறைவர் ஆலகால நஞ்சுண்டு உயிர்களைக் காத்த பதி. கும்பகோணம் - நீடாமங்கலம் வழியில் உள்ளது.

~~~~~

## 163/ தெ.100. அரதைப் பெரும்பாழி (அரித்வாரமங்கலம் - 612 802)

" - விரும்பும்
விரதப் பெரும்பாழி விண்ணவர்கள் ஏத்தும்
அரதைப் பெரும்பாழி ஆர்ந்தோய்" (164)

கொல்லா விரத இடங்களையுடையதும் தேவர்கள் சூழ்ந்து வணங்கும் சிறப்புடையதுமான திரு அரதைப் பெரும்பாழி தலத்தில் நிறைந்தொளிர்பவனே.

**பாதாள வரதர் - அலங்கார வல்லி**

திருமால் பன்றி உருக்கொண்டு இறைவனைத் தேடிய பதி. திருமால் தோண்டிய குழி சிவலிங்கத்திற்கருகில் மூடிவைக்கப் பட்டுள்ளது. சம்பந்தர் பாடியது. தஞ்சை, குடந்தையிலிருந்து செல்லலாம்.

## 164/தெ.101. அவளிவணல்லூர் - 612 802

" - சரதத்தால்
ஏதும் அவணிவணென்று எண்ணாதவர் இறைஞ்சி
ஓதும் அவளிவணல் லூருடையோய்" (165)

உண்மையால் எத்துணையும் அவ்விடத்தான், இவ்விடத்தான் என எண்ணாது பணிந்து புகழும் திருஅவளிவணல்லூரிடத்து நிலைபெற்றவனே.

**சாட்சி நாதர் - சௌந்தர வல்லி**

காசி சென்றிருந்த ஆதிசைவ அந்தணர் திரும்பியதும், அம்மைநோயால் தாக்குண்ட தன்மனைவியைக் கண்டு 'இவளல்லள்' என்று மயங்க, இறைவர் "அவள் இவள்" என்று சாட்சி சொன்ன நல்லூர். அம்மாதரசிக்குப் பழைய உருவு நல்கியவர். கும்பகோணம்-அம்மாப்பேட்டை பேருந்தில் செல்லலாம்.

## 165/தெ.102. பரிதி நியமம் (பரிதியப்பர் கோயில்) (பருத்தியப்பர் கோயில் - 614 904)

" - கோதகன்ற
நீட்டுஞ் சுருதி நியமத்தோர்க்கு இன்னருளை
நீட்டும் பரிதி நியமத்தோய்!" (166)

நால்வருணம் ஆசிரமம் ஆகிய குறைகள் அகன்று உயிர்நேய உணர்வுடையராய் வேதத்தின் உத்தரபாக சீவதயவு நெறியைப் பின்பற்றுவோர்க்கு நல்லருளைத் தானே எழுந்தருளித் தந்தருளும் திருபரிதி நியமப் பதியோனே

**பரிதியப்பர் - மங்கள நாயகி**

பரிதி (சூரியன்) வழிபட்ட நியமம் (கோயில்). சம்பந்தர் பாடியது. தஞ்சையிலிருந்து செல்லலாம்.



## 166/தெ.103. பூவனூர் - 612 803

" - காட்டியநம்
தேவனூரென்று திசைமுகன் மால் வாழ்த்துகின்ற
பூவனூர் மேவும் புகழுடையோய்" (167)

நற்கதிக்கு வழிகாட்டும் நம் தெய்வத் திருவூர் இது என்று நான்முகனும், திருமாலும் வாழ்த்தி வணங்குகின்ற திருப்பூவனூர் பொருந்தும் அருள் கீர்த்தியுடையோனே.

**புஷ்பவன நாதர் - கற்பகவல்லி**

சுகப் பிரம்மரிஷி பூ (புஷ்ப) வனம் வைத்து வழிபட்டது. அப்பர் பாடியது. விஷக்கடி, எலிக்கடி தோஷம் நீங்குமிடம். மன்னார்குடி யிலிருந்து செல்லலாம்.

## 167/ தெ.104. பாதாளேச்சுரம் (பாமணி - 614 014)

" - பூவுலகாம்
ஈங்கும் பாதாள முதல் எவ்வுலகும் எஞ்ஞான்றும்
தாங்கும் பாதாளேச்சுரத்து அமர்ந்தோய்" (168)

பூதலம், பாதாளம், மேதலம் ஆகிய எவ்வுலகும் காத்தருளும் திருப்பாதாளேச்சுரத்தில் விளங்குபவனே.

**நாக நாதர் - அமிர்த நாயகி**

பாதாளத்திலிருந்து ஆதிசேடன் வெளிப்பட்டு தனஞ்செய முனிவராய் வழிபட்ட பதி. இறைவன் சுயம்பு. சம்பந்தர் பாடியது. மன்னார்குடியிலிருந்து செல்லலாம்.

## 168/தெ.105. திருக்களர் - 614 720

" - ஓங்குபுத்தி
மான்களரி லோட்டி மகிழ்வோ டிருந்தேத்தும்
வான்களரில் வாழு மறைமுடியே" (169)

காருணியம் விளங்கும் அறிவாளிகள் தம் குற்றம் குறைகளை விலக்கி பரமானந்தத்தோடு இருந்து ஏத்தி வழிபடும் திருக்களரில் வாழ்கின்ற மறைமுடியாம் வைதீகப் பெரும்பொருளே.

**களர்முளை நாதர் - அழகேசுவரி**

களரி-சபை, அரங்கம். இறைவன் துர்வாசமுனிவருக்குப் பிரமதாண்டவ தரிசனம் அருளியதால் இத்தலம் திருக்களரி எனப்பட்டு, பின் களர் என்றாயிற்று. சம்பந்தர் பாடியது.

திருத்துறைப்பூண்டி - மன்னார்குடி சாலையில் உள்ளது.

## 169/தெ.106. திருச்சிற்றேமம்
(சிற்றாய்மூர்/சித்தாய்மூர் - 610 203)

" - மேன்மைதரும்
முற்றேமம் வாய்ந்த முனிவர் தினம் பரவும்
சிற்றேமம் வாய்ந்த செழுங்கதிரே" (170)

அருளாற்றலைப் பெற்ற, பாதுகாவலை உடைய முனிவர் பெருமக்கள் நாளும் தொழுது வணங்கும் திருச்சிற்றேமம் என்னும் திருப்பதியின் அருட்கதிரே.

**பொன்வைத்த நாதர் - அகிலாண்டேசுவரி**

பிரமரிஷி, சித்தர்கள் வழிபட்டது. சம்பந்தர் பாடியது. திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் ஆலத்தம் பாடியிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும்.



## 170/தெ.107. திருவுசாத்தானம்
(கோயிலூர்/ கோவிலூர் - 614 704)

" - கற்றவர்கள்
எங்குழு சாத்தானம் இருங்கழக மன்ற முதல்
தங்கும் உசாத்தானத் தனி முதலே" (171)

கற்க வேண்டிவற்றைக் கற்றவர்கள், ஆய்வகம், சீர்மிகு கேள்விச்சங்கம், கருத்துரை அரங்கம் ஆகியவற்றில் சென்றிருந்து அறிய வேண்டியவற்றை அறிந்து நடக்கும் திரு உசாத்தானத்து முழு முதலே!

**மந்திரபுரீஸ்வரர் - பெரியநாயகி**

இந்திரன், இலக்குவன், ஜாம்பவான், சுக்ரீவன் வழிபட்டது. விசுவாமித்திரருக்கு நடனம் நல்கிய தலம். இராமர் சேது அணை கட்டுவதற்கு மந்திர உபதேசம் அருளிய இறைவர். அவரிடம் அணைகட்ட வழி முறைகளை உசாவி அறிந்ததால் உசாத்தானம் என வழங்கப்படுகிறது. இறைவர் சுயம்பு. சம்பந்தர் பாடியது. முத்துப்பேட்டையிலிருந்து - மன்னார்குடி செல்லும் சாலையில் உள்ளது.

## 171/தெ.108. (திரு) இடும்பாவனம் - 614 735

" - பொங்குபவ
அல்லலிடும் பாவம் நத்த மட்டொளி செய்கின்ற திரு
மல்லலிடும் பாவனத்து மாட்சிமையே" (172)

பொங்கியெழுகின்ற தூல சூக்கும காரணப் பிறப்புகளின் பழி பாவங்களை அழித்தருளுகின்ற திருஇடும்பாவனத்தின் அருள்மாண்பனே!

**மணக்கோல நாதர் - மங்கள வல்லி**

அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டியருளிய பதி. சம்பந்தர் பாடியது. திருத்துறைப்பூண்டியிலிருந்து தொண்டியக்காடு வழியில் உள்ளது.